# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 108 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 29 வியாழன், 12/06/2014 ( TP- 0233238444 )

www.putheyavan.com



நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.
*டிஜிட்டல் பிறின்ரிங் (Banner & Sticker )
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி:- 023-2223545,
மின்னஞ்சல் :-
nithithilam31@gmail.com


# ஐ.நா விசாரணைக்குதடை! பாரளுமன்றில் விவாதம்

(கொழும்பு)



ஐநா விசாரணைக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க கூடாது என வலியுறுத்தி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களினால் நேற்று புதன் கிழமை சபாநாயகரிடம் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
ஆளும் கூட்டமைப்பின் 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு இந்தப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தனர்.

இதன் மூலம், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு, ஐநாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு இலங்கையில் விசாரணை நடத்த அனுமதிக்க கூடாது என இந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நாளை வெள்ளிக்கிமை அன்று நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரேரணை மீதான விவாதம் நடத்துவதற்கான தினம் குறித்து தீர்மானிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதேவேளை எதிர்வரும் 17ம் திகதி பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், அன்றைய வராத்திலேயே ஐநா விசாரணைக் குழுவுக்கு எதிரான பிரேரணை மீதான விவாதங்கள் இடம்பெறலாம் எனவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் ஆளும் தரப்பும் ஜனாதிபதி மற்றும் அவரது ஆலோசகர்களும் இணைந்து உருவாக்கிய பொறியே ஐநா விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பது குறித்த பொறுப்பை பாராளுமன்றிடம் ஒப்படைத்தமை என ஆளும் தரப்பின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். 11ம் பக்கம் பார்க்க...

## தமிழ்ப் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் ஐ.நா

தமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், வடக்கு கிழக்கில் 40 வீதமான பெண்கள் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நிலைமையை உணர்வதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் பிரதிநிதி அலியான் சிபினலே இதனைத் தெரிவித்துள்ளார்.
11ம் பக்கம் பார்க்க...

## ஐ.நா பிரதிநிதியின் கருத்துக்கு இலங்கை எதிர்ப்பு




ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமை மற்றும் இடம்பெயர் மக்களுக்கான விசேட பிரதிநிதி சலோகா பியானியின் (Chaloka Beyani) கருத்துக்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பியனியின் இலங்கை விஜயத்தின் போது அவரைச் சந்தித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக வெளியான குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர் மக்கள் படையதிகாரிகளின் முன்னிலையில் தம்மிடம் கருத்துக்களை வெளியிட்டதாக முன்னர் பியானி குறிப்பிட்டதாகவும், தற்போது அந்த வேறும் குற்றச்சாட்டு ஒன்றை சுமத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

11ம் பக்கம் பார்க்க...

## தமிழ் மக்களுக்கு காணி இல்லை! இராணுவத்துக்கு 6,348 ஏக்கர்கள் சுவீகரிப்பு!

(வவுனியா)



தமிழ் பேசும் மக்களுக்கு உரித்துடைய, செட்டிக்குள பிரதேச செயலக பிரிவுகுள்பட்ட 6,348 ஏக்கர் காணியை, நெடுங்கேணியில் உள்ள பிரிகேட்டுக்கு பழமரச்செய்கைக்காக கையளிக்குமாறு காணி - காணி அமைச்சின் மேலதிக செயலாளர் அரச அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

செட்டிக்குளம் பிரதேசத்திலும், வவுனியா மாவட்டத்திலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குடியிருப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் காணி அற்றவர்களாக உள்ள நிலையில், நெடுங்கேணியிலுள்ள பிரிகேட்டுக்கு கையளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ள காணி, இறுதிக்கட்டப் போரினால் இடம்பெயரச் செய்யப்பட்டு மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தடுத்து வைக்கப்பட்ட முட்கம்பி வேலி முகாம்கள் அமைக்கப்பட்ட இடமாகும். அந்த இடத்தையும், அதற்குச் சூழவுள்ள மேலதிகமான இடத்தையும் இராணுவம் சுவீகரித்து வைத்துள்ளது.
11ம் பக்கம் பார்க்க...

### கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய டி.ராஜா வலியுறுத்தல்!

கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.ராஜா வலியுறுத்தினார்.
மாநிலங்களவையில் நேற்று ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பேசும்போது அவர் இவ்வாறு கூறினார். 11ம் பக்கம் பார்க்க..

## ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வை தடுத்தமைக்கு டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் கண்டனம்

(கொழும்பு)

புலனாய்வு ஊடகவியல் தொடர்பான பயிற்சி செயலமர்வை சட்டவிரோதமாக குழப்பியதை டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் சிறிலங்கா நிறுவனம் வன்மையாக கண்டிக்கிறது.
இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,பொது நலனுக்கான விடயங்களை புலனாய்வு செய்வதற்கு புலனாய்வு அறிக்கையிடல் தொடர்பான பயிற்சியை வழங்குவதற்கு எமது நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வை தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் குழப்புவதற்கு பல்வேறு சக்திகள்
11ம் பக்கம் பார்க்க...


24X7 மணிநேர முதன்மை செய்திகளுடன்..
www.putheyavan.com http://www.
அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்.
உள்ளதை உள்ளபடி....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........

## தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம் தொடர்பில் கலந்துரையாடல்



(அலுவலகச் செய்தியாளர்)

தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு விசேட முன் ஆயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் வருடந்தோறும் "தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம்"அனுஸ்டிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இவ் வருடத்திற்கான "தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம்" எதிர்வரும் யூலை 14ம் திகதி தொடக்கம் 20ம்திகதி வரையில் அனுஸ்ரிக்கப்பட இருக்கின்றது.

-இந்த நிலையில் மனனார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம்(10) இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மாவட்ட அலுவலகர், அமைச்சின் பிரதிநிதிகள், செயலக அதிகாரிகள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மன்னார் வவுனியா பேரூந்தில் மீதிப்பணம் வழங்குவதில்லை

மன்னார் வவுனியா போக்குவரவில் ஈடுபடும் பேரூந்துக்களில் பயணிகளுக்கு மீதிப்பணம் வழங்குவதில்லை என பிரயாணிகளால் குற்றஞ் சாட்டப்படுகின்றது
மன்னாரில் இருந்து வவுனியாவுக்கு தினமும் மணித்தியாலத்திற்கு ஒரு பேரூந்து என மாறி மாறி அரசு தனியார் பேரூந்துக்கள் சேவையில் ஈடுபடுகின்றன இதில் பயணிப்பவர்களிற்கு மீதிப்பணம் வழங்குவதில்லை என போக்குவரவு பிரயாணிகளால் குற்றம் சாட்டப்படுகின்றது மன்னாரில் இருந்து வவுனியாவிற்கு ரூபா-115 கட்டணமாக உள்ள போதும் பயணிகளிடமிருந்து ரூபா-120 பெறப்படுகிறது சில்லறை இல்லை எனும் போர்வையில் இந்த ஏமாற்று வேலை தினமும் நடை பெறுவதாகப் பலரும் குற்றம் சாட்டுகின்றனர் இச்செயலில் வஞ்சகமில்லாமல் ஒற்றுமையாக அரச தனியார் இரண்டுமே ஒரே விதமாகச் செயற்படுகின்றன இதனால் நாளொன்றுக்கு நூற்றுக் கணக்கான பயணிகள் பாதிக்கப்படுகின்றனர் ஆகவே இவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் அத் துடன் குறித்த சேவை யில் ஈடுபடும் பேருந் துக்கள் ஒதுக்கப்பட்ட நேரத்தை விடதாமதமாகவே சென்றடை கின்றனர் இதே நிலை யாழ் மன்னார் போக்கு வரவிலும் காணப்படுகி ன்ற துடன் அரச பேருந்துக்கள்நேர முகாமைத்துவத்தை சீராககடை ப்பிடிப்பதாகவும் பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

## மன்னாரில் புதிதாக 30 கிராம அலுவலகர்கள் நியமணம்!

(அலுவலகச் செய்தியாளர்)

மன்னாரில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் சேவையாற்றுவதற்கு மேலும் 30 கிராம அலுவலகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றுவதற்கென இவர்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.புதிதாக தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர்களுக்கான நியமணத்தினை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய வழங்கி வைத்தார்.

மேற்படி நியமணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் (10.06.2014) மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றிருக்கின்றது.

இதில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏலவே 153 கிராம அலுவலகர்கள் பணியாற்றும் நிலையில் தற்போது அது 183 ஆக அதிகரித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாராட்டு



மன்/நொச்சிக்குளம் றோ.க.த.க பாடசாலை உயிலங்குளம் 2014ம் ஆண்டிற்கான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் கோட்டமட்டம் வலய மட்டம் /மாவட்ட மட்டங்களில் 11 வயது பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனையாக ச. ரெட்ணிக்கா (சம்பியனாக) தெரிவு செய்யப்பட்டார்.

மாணவியின் ச.ரெட்ணிக்கா, தந்தை - சந்தியோகு குலாஸ், தாய் - ஜிவராணி பாராட்டுவோர் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,

## அனுமதியற்ற மாலை நேர மீன் வியாபாரத்தை இடம் மாற்றவும்

(அலுவலகச் செய்தியாளர்)

மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதியாகிய அல் அக்சர் பாடசாலைக்கு முன் புறமாக உள்ள வீதியில் மாலை வேளையில் மீன் வியாபாரம் நடை பெற்று வருகின்றது குறித்த இடத்தில் மாலை வேளையில் வியாபார சந்தை போல் பலரும் மீன்வாங்கிச் செல்வது வழமையாகிவிட்டது குறிப்பாக கடமை முடிந்து வீடுகளிற்குச் செல்லும் அரச ஊழியர்களை அதிகம் காண முடியும் எனவே குறகிய வீதியில் மீன் வியாபாரம் நடைபெறுவதால் போக்குவரவாளர்களிற்கு சிரமம் [illegible] நாற்றம் வீசுகின்றது இந்த சட்ட விரோத மீன் விற்பனை நிலையத்தை நகர சபையினர் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என அப்பகுதி போக்குவரவாளர்களும் சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள்விடுத்துள்ளனர் இவ்விடத்திற்கு அருகில் பொதுமக்கள் வசிப்பிடங்கள் விடு திகள் உள்ள மையினால் இவ்வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் அனாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களை உபயோகிப்பதாகவும் இதனால் பெண்கள் அச்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது இதற்கு நகரசபை துரித நடவடிக் கை எடுக்க வேண்டும் மென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சிறுவர் துஷ்பிரயோகத்தில் இடுபட்டவர் தொடந்தும் விளக்கமறியலில்

(அலுவலகச் செய்தியாளர்)

தையல் பயிற்சி வகுப்புக்கு சென்ற சிறுமியை பாலியஸ் துஸ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வரும் சந்தேக நப்ரின் பினை விண்ணப்பத்தை நீதிமன்று நிராகரித்தது நேற்று முன் தினம் (10.06.2014) சந்தேக நபர் சார்பில் அவரது சட்டத்தரணிகளால் குறித்த சந்தேக நபரை பிணையில் விடுமாறு கோரி மன்னார் நீதவான் நீதிமன்றில் பிணைவிண்ணப்பம் செய்யப்பட்டது இதன் போதே குறித்த சம்பவத்தின் பாரதூரத்தன்மை கருதி நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் இவ் விண்ணப்பத்தை நிராகரித்தார் கடந்த புதன்கிழமை (04.06.2014) மாலை நேர தையல் பயிற்சிக்கு சென்ற சிறுமி ஒருவரை பிரதான வீதியில் அமைந்திருக்கும் காலணி விற்பனை நிலையத்தில் தொழில் புரியும் இளைஞர், ஒரவர் கடையினுள் அழைத்து பாலியல் துஸ்பிரயோகம் செய்ததாக குறித்த சிறுமியால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து கைது செய்யப்பட்டார் குறித்த சிறுமியால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து கைது செய்யப்பட்டார் குறித்த சிறுமி மன்னார் பெரியகடை பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கி தையல் பயிற்சி பெற்று வருபவராவார் குறித்த இளைஞர் காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

## இயற்கை அனர்த்தம் தொடர்பிலான முன்னெச்சரிக்கை செயலமர்வு

(அலுவலகச் செய்தியாளர்)



இயற்கை அனர்த்தம் தொடர்பிலான முன்னெச்செரிக்கை வேலைத்திட்டம் தொடர்பான செயலமர்வு நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம பெற்றது.

மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் மாவட்ட செயலகத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பரிய, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண அமைச்சின் ஏற்பாட்டில் மன்னாரில் "உலக சுற்றுச்சூழல் வார"நிகழ்வு

(அலுவலகச் செய்தியாளர்)

வடமாகாண அமைச்சின் ஏற்பாட்டில் "உலக சுற்றுச்சூழல் வார"நிகழ்வு நேற்று முன்தினம் (10) செவ் வாய்க்கிழமை காலை மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலையில் மன்னார் வலயக்கல்விப பணிப்பளர் எம். எம். சியான் தலைமையில் இடம் பெற்றது.



-குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண விவசாய,கமநலசேவைகள்,கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைசசர் பி.ஐங்கர நேசன் , வடக்கு மாகாண கல்வி,பண்பாட்டு, விளையாட்டுத்துறை மற்றும்



சுற்றாடல் அமைச்சர் ரி.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

-கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப் பினர களான அயூப் அஸ்மீன், வைததிய கலாநிதி ஞானசீலன் குனசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த விருந்தினர்கள் பேண்ட் வாத்திய இசையுடன் பாடசாலை மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந் நிகழ்விற்கு மன்னார் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதனை போது உலக சுற்றுச்சூழல் தொடர்பில் மாணவர்களுக்கு தெழிவு படுத்தப்பட்டதோடு மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலை மாணவிகளினால் சுற்றாடல் கீதம் இசைக்கப்பட்டதோடு சத்தியப்பிரமானமும் செய்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து மன்னார் பெரிய பாலத தடியில் மாணவர்களை ஒன்றினைத்து சிரம



தானப்பணிகளும் இடம் பெற்றனம குறிப்பிடத தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY



புதியவன்
පුදියවන් PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

## தமிழ்த்தேசியம் மாற்றம் பெறுமா?

தமிழ்மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பு எப்போது தான் நிறைவேறப்போகிறது என்ற எதிர்பார்ப்பு தமிழர்கள் மத்தியில் கனவாக தொடர்கிறது. பல தசாப்தங்கள் கடந்தும் எமது வாழ்வியல் போக்கில் ஏதாவது மாற்றம் நிகழுமா எனும் ஆவல் காணப்படுகின்றது.
மனித வாழ்விலே ஒரு மனிதன் அனுபவிக்கக் கூடாத அத்தனை துன்ப துயரங்களையும் வாழ் நாள் முழுக்க வாழ்வியலால் அனுபவித்து கொண்டிருக்கின்ற இனமாக தமிழினம் காணப்படுகிறது.

உண்மையான விசுவாசமான இனத்துவ சிந்தனையுள்ள தலைமைத்துவம் அமையவில்லை அதில் புலிகளின் தலைமையை ஏற்றுக்கொண்டிருந்தாலும் முடிவில் நிலமை வேறு விதமாக மாறிவிட்டது.
அரசியல் தலைமைகள் தமக்குள் பதவி மோகங்களில் சிக்குண்டு சமூகத்தை பிளவு படுத்தும் செயலிலே அதிகம் ஈடுபட்டனர் என்பது கடந்த கால அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளிலிருந்து மக்கள் அறிந்து கொண்ட விடயம் எனவே இவ்வாறான நிலையில் தற்போது தமிழ்மக்கள் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழலாமா? அல்லது அதற்குரிய ஏது நிலைகள் புலிகளின் மறைவுடன் கானாமல் போய்விட்டது.இதற்கு பின்னும் தமிழர்களுக்கு தீர்வு கிட்டுமா என்பது சந்தேகமே.

எனவே எந்த விதமான அதிகாரமும் இல்லாத மாகாண சபையில் இருந்து கொண்டு என்ன செய்யலாம் 13வது சரத்து என்பது தமிழர்களின் வாழ்வுரிமைக்கு எந்த வகையிலும் சாத்தியமா? நாடு கேட்டு போராடிய இனம்1987ல் நிராகரித்த 13ற்கு போராடும் நிலை வந்துள்ளது. தமிழர் தரப்பிற்கு சரியான தீர்க தரிசனம் ஒரு காலத்திலும் இருந்ததில்லை எதிர்காலத்திலும் இருக்குமா? என்பது சந்தேகமே.

எனவே தமிழக முதல்வரின் இன்றய வாதத்தின் பிரகாரம் தமிழர் தரப்பு 13 பற்றி வாய்திறக்கவும் கூடாது. மாகாணசபை முறைமையும் எமக்குதீர்வல்ல என்பதில் தெழிவு அவசியம் அத்தெழிவு இவர்களிடம் இல்லை.

மாற்று யோசனையில் தீர்வு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு எந்த வித நகலும் இல்லை பூரணப்படுத்தப்பட்டு கையளிக்க கூடியவாறு இல்லை தமிழரின் இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் பரந்து பட்ட ஆலோசனை உள்வாங்கப்படுவதில்லை பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தமிழர் தலைவிதியை தீர்மானிப்பவர்களாக செயலாற்றுகின்றனர் அதிலும் தமிழ் தேசியம் என்ன வென்று தெ்ரியாத வழிப்போக்கராக தேசிய பட்டியலில் வந்தவரே முன்னணி வகிக்கின்றனர்

இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் பலர் சேர்ந்து செய்ய வேண்டிய விடயத்தை இவர் ஒருவர் முன்னெடுப்பது நியாயமா? அதுவும் அடிப்படையில்லாதவர் எனவே வாழ்வுரிமைக்காக இலட்சக்கணக்கானவர்கள் உயிர் துறந்துள்ள நிலையில் அவர்களது ஆத்மா இந்த ஏமாற்றுக்காரர்களை ஒரு போதும் மன்னிக்காது ஆகவே தமிழ்த்தேசியத்தை தீர்க்க தரிசனத்துடன் முன்னெடுப்பவர்கள் விசுவாசத்துடன் கை கோர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## மகிந்தவின் முடிவு தேசப்பற்றை சோதிக்கும் ஒரு தந்திரோபாய யுக்தி!



இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அமைக்கும் எந்தவொரு விசாரணைக் குழுவையும் நாட்டுக்குள் அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து நாடாளுமன்றமே முடிவு செய்யும். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச.

நேற்று முன்தினம் பொலன்னறுவையில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை அடுத்து, இலங்கையில் இடம்பெற் றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நவநீதம்பிள்ளை நேற்று முன்தினம் அறிவித்தமையை அடுத்தே மஹிந்த ராஜபக்சவின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இந்த கருத்தானது தற்போது இலங்கை பாராளு மன்றில் இருக்கும் அரசியல் கட்சிகளின் தேசப் பற்றை சோதிக்கும் ஒரு தந்திரோபாய யுக்தி என்றால் மிகையாகாது. மஹிந்த அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட பாராளுமன்றிற்கு இந்த பிரேரணை விவாதத்துக்கு வருமானால் இது ஒரு ஜுஜிபி மேட்டர். ஒரு நிச்சயிக்கப்பட்ட வெற்றி என்பதை அடித்துக் கூறலாம். முடிவு விசாரணைக் குழவை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என்றே கிடைக்கும்.

**இங்கு பலப்பரீட்சை யாருக்கு?**
எதிர்க்கட்சிகள், தேசத்துரோகிகள் பட்டத்தை மீண்டும் தனதாக்கி கொள்ளும் ஒரு சூசகமான முடிவே ஜனாதிபதியின் இந்த தீர்மானமாகும். எதிர்க்கட்சிகள் இந்த பிரேரணைக்கு ஆதரித்து வாக்களித்தாலும், எதிர்த்து வாக்களித்தாலும் எதிர்கொள்ளப் போவது ஒரு சவாலே. எதிர்நோக்கி இருப்பது ஒரு தேர்தல் காலம். நாட்டை காட்டிக் கொடுத்து விட்டார்கள் என்று கூப்பாடு போடுவதற்கு அரசுக்கு கிடைத்த மிகப்பெரும் துரும்பு இதுவாகும்.

**தேசத்துரோகம் என்கிற பருப்பு எல்லாம் TNA இடம் வேகாது!**
பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பானது அரசை எப்போதும் எதிர்க்கும் ஒரு எதிரி, அவர்களை பொறுத்தவரை நாட்டுப்பற்று தேசத்துரோகம் என்கிற பருப்பு எல்லாம் வேகாது.

ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் நலிந்து தனது ஆதரவு தளத்தினை முற்றாக இழந்து கிடக்கும் ஐக்கிய தேசிய கட்சி ஐநா விசாரணைக்குழு தொடர்பில் இதுவரைக்கும் ஒரு தெளிவான நிலைக்கு வந்ததாக தெரியவில்லை. இவர்களது நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலையே, அரசை மறைமுகமாக ஆதரிக்கும் ரணில் என்கிற குற்றசாட்டு இருக்கும் நிலையில் அரசுக்கு ஆதர வளித்தால் தனக்கு தற்போது இருக்கும் கொஞ்ச நஞ்ச மக்கள் செல்வாக்கினை தக்க வைக்க முடியா மல் போகும் நிலை வருலாம். மாறாக வழமை போன்று எதிர்த்து வாக்களித்தால் அரசின் பிரசார ஊதுகுழல் பொது மக்கள் மத்தியில் பீறிட்டுப் பாயும். நாட்டை காட்டிக் கொடுத்த முதலாவது தரப்பினர் என வசை பாடும். இது அப்பாவி சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் அகல வேருன்றும் எனவும் எதிர் பார்க்கலாம்.

மறுபுறம் ஜேவிபி மற்றும் பொன்சேகா கட்சியினரின் நிலையும் அரசை பொறுத்தவரை தேசத்துரோகிகள் பட்டியலில் சேருவதற்கான வாய்ப்பே உண்டு. சொன்னாலும் குற்றமடா சொல்லாவிட்டாலும் குற்றமடா என்பதே இவர்களது நிலையாகும்.

**ஜெனீவா போகப்போவதாக கூறிய ஹக்கீமின் நிலை என்ன?**
மு.கா. வின் தலைவர் ஹக்கீமின் நிலை மிகவும் சங்கடத்துக்குள்ளான புதிய தோற்றத்தை பெற்றுள்ளது. இலங்கை முஸ்லிம்களுக்கு அநீதி இடம் பெறுகிறது இதனை ஜெனீவாவுக்கு சென்று முறையிட வேண்டி வரும் என்றெல்லாம் அரசை அச்சுறுத்திய ஹக்கீம் ஐ.நா. வின் விசாரணை கமிசன் பிரதிநிதி நியமனம் பாராளுமன்றுக்கு வரும் போது தனதும் கட்சியினதும் நிலைபாட்டை எங்ஙனம் அமைத்துக்கொள்வார் என்ற கேள்வி எழுகிறது.

அடிக்கடி ஹக்கீம் கூறும் வார்த்தைகளில் ஒன்றுதான் "தேசப்பற்றென்பது அயோக்கியனின் இறுதி அடைக்கலம்" என்பதாகும். இந்த பிரேரணையும் ஒரு தேசப்பற்றாளனின் ஒரு இறுதி அடைக்கலமே. இதற்கு ஹக்கீமின் நிலை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்துக்கும் சாதகமாக பயன்படுத்துவதை எண்ணுவாரா அல்லது தேசப்பற்று என்கிற அடைக் கலத்தோடு அடங்கிக் கொள்வாரா? பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்!

**சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மகிந்தவின் முடிவு!**
இந்திய, ரஷ்ய, சீன, பாகிஸ்தான் அமெரிக்க, ஐரோப்பா ஆகிய சர்வதேசத்தை மிகவும் லாபகரமாக சதுரங்க காய் போன்று கையாளும் மஹிந்த அரசு, சர்வதேச போர்க்குற்ற விசாரணை குழுவை அனுமதிக்கும் முடிவை இறையாண்மை பொருந்திய பாராளுமன்றுக்கு அங்கீகாரம் பெற சமர்ப்பிக்க நினைத்த யோசனையானது அவரது அரசியலை பொறுத்த வரைக்கும் மிகவும் சானாக்கியமாக முடிவு என்று கூறலாம்.

அதுமாத்திரமல்லாது பாராளுமன்றுக்கு பிரேரணை கொண்டுவர நினைக்கும் மகிந்தவின் நிலை இலங்கையின் ஒட்டுமொத்த மக்களையும் பிரதிநித்துவ படுத்தும் ஒரு செயற்பாடாகும். இதில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சிக்கித்தவிக்க போவது எதிர்கட்சி அரசியல் வாதிகளே!

<u>ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் ஐதேக</u>

## தற்கொலை செய்தாலும் நாடு கடத்துவது உறுதி அவுஸ்ரேலியா

(அவுஸ்ரேலியா)
அவுஸ்திரேலியா புகலிடக் கோரிக்கையாளர்களை அதிரடியாக நாடுகடத்தும் செயற்பாடு ஒன்றை தொடக்கி உள்ளது. தற்கொலை செய்தாலும் நாடு கடத்தப்படுமெனெ அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்கள அதிகாரி அதிரடியாக அறிவித்துள்ளார். இதன் பிரகாரமாக அனைத்து வழக்குகளும் தோல்வி அடைந்தவர்களை உடனடியாக நாட்டை விட்டு செல்ல வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

மேலும் நேற்றைய தினம் குடிவரவு திணைக்கள அதிகாரி ஒருவர் இவருடன் தொலைபேசி மூலமாக தொடர்பு ஏற்படுத்தியதாகத் தெரிவித்த புகலிடக் கோரிக்கையாளர், உடனடியாக சொந்த நாட்டுக்கு செல்ல வேண்டும் என்றும், அப்படி மறுக்கும் பட்சத்தில் பலவந்தமாக நாடுகடத்தப்படுமெனவும் அறிவிக்கப்படுள்ளதாக தெரிவித்தார். இதற்கு புகலிடக் கோரிக்கையாளர் நான் நாட்டுக்கு செல்வதை விட இங்கு தற்கொலை செய்துவிடலாம் எனத் தெரிவித்துள்ளார். ஆனால் குடிவரவு அதிகாரி அவரிடம் கூறியதாவது, இங்கு தற்கொலை செய்வதை விட நாட்டிற்கு சென்று தற்கொலை செய்தால் எமக்கு செலவு குறைவாகும். அதுவென்று உங்களது தடுப்பு முகாமில் இருக்கும் என ஆணித்தரமாக தெரிவித்ததாக புகலிடக் கோரிக்கையாளர் மிகவும் மனவேதனையுடன் தெரிவித்தார்.

இவ்வாறு குடிவரவு அதிகாரிகள் செயற்படுகின்றமை மிகவும் வேதனை அளிப்பதாக மேலும் அவர் தெரிவித்தார். சட்டவிரோத இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது அவுஸ்திரேலியா சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

கடந்த எட்டு மாதங்களில் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் படகுகள் அவுஸதிரேலியாவை சென்றடையவில்லை என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ரொபின் மூடி தெரிவித்துள்ளார். கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த எட்டு மாதங்களில் எந்தவொரு இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் படகும் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடத்தப்பட்ட தமிழ் அகதிகள் மீது சித்திரவதை விசாரணை நடத்தப்படும் என்கிறது பிரித்தானியா

(பிரித்தானியா)
பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட தமிழர்கள் சித்திரவதை மற்றும் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் விசாரணை செய்யவுள்ளது.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். லண்டனில் நேற்று ஆரம்பமான வன்முறையின் போது பாலியல் வன்புணர்ச்சியை தடுக்கும் பிரகடனத்துக்கான மாநாட்டின் ஆரம்ப நாளில் அகதிகள் சட்டத்தரணிகள் மற்றும் குழுக்கள் முன்வைத்த முறைப்பாட்டின் பின்னரே ஹேக் தமது தகவலை வெளியிட்டார்.

அண்மைய வாரங்களில் நாடு கடத்தப்பட்ட தமிழ் அகதிகளும் இவ்வாறான சித்திரவதைகளுக்கு உட்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினார்கள். இதற்கு பதில் வழங்கிய வில்லியம் ஹேக்,

அகதிகள் விடயத்தை பிரித்தானிய உள்துறை அமைச்சே கையாளுகிறது என்று குறிப்பிட்டார். எனவே அந்த அமைச்சு இந்த விடயத்தில் விசாரணை நடத்துவதாக உறுதியளித்துள்ளதாக ஹேக் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவை பொறுத்தவரை அது அடைக்கலம் கோருவோருக்கு திறந்த நாடு எனினும் ஒழுங்குகள் உரிய முறையில் பேணப்படும். எவராவது இந்த ஒழுங்குகள் பேணப்படவில்லை என்று உணர்ந்தால், அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று ஹேக் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை நேற்றைய ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான பிரதிநிதி அஞ்சலினா ஜொய்லி, மாநாட்டில் பிரித்தானியாவில் உள்ள விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் தொடர்பில் பேசவுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்தநிலையில் அவர்களுக்கு ஏற்பட்ட பாலியல் மற்றும் துஸ்பிரயோக வன்முறைகள் தொடர்பில் 'உயர்ஸ்தானிகர் அன்டனியே கட்டரஸ் நாளை வியாழக்கிழமை மாநாட்டுக்கு வரும் போது கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் இலங்கையில் பொலிஸூம் இராணுவமும் சித்திரவதைகளை ஒரே மாதியாக செயற்படுத்தி வருவதாக சித்திரவதை தொடர்பான கொள்கை வகுப்பாளர் பேனியட் லௌவிஒக்ஸ் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் குடிவரவு தொடர்பான சட்டத்தரணியாக செயற்படும் குலசேகரம் கீதாத்தனன் தமது உரையில், பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்தப்படும் தமிழ் அகதிகள் இலங்கையில் பாரிய சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர். எனினும் பிரித்தானிய தொடர்ந்தும் தமிழர்களை நாடு கடத்துவதாக அவர் குற்றம் சுமத்தினார்.

# சுவிசில் மிகவும் சிறப்பாக உணர்வுடன் நடைபெற்ற 'எழுச்சிக்குயில் 2014"



தமிழர் நினைவேந்தல் அகவத்தினரால் முதற்தடவையாக மழலை, சிறுவர், இளையோர், வளர்ந்தோர், இணை எழுச்சிக்குயில் போன்ற பிரிவுகளாக நடாத்தப்பட்ட போட்டிகளில் ஆர்வத்தோடு பங்குபற்றிய அறுபதிற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் மொழியாற்றலுடனும், இசையறிவுடனும், உணர்வுடனும் எழுச்சிப் பாடல்களைப் பாடிய பாடகர்களுடன், இசைக்கலைஞர் களும் மக்கள் மனதில் நின்றனர்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத் தடங்கள், வீர வரலாறுகள், -தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் உயிர்ப்புடன் இருக்க தங்களையே அர்ப்பணித்து விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்த அனைத்துக் கலைஞர்களினதும் நினைவுகளைச் சுமந்து நடாத்தப்பட்ட தமிழீழ எழுச்சிப் பாடல் போட்டியான "எழுச்சிக்குயில் 2014" நிகழ்வானது கடந்த ஞாயிற்றுக்கிழமை சுவிஸ், பேர்ணில் பிரமாண்டமாக நடைபெற்றிருந்தது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழவினரின் ஆதரவில் தமிழர் நினைவேந்தல் அகவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போட்டி நிகழ்வானது, பொதுச்சுடரேற்றலுடன், தமிமீழத் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இளைய தலைமுறையினரிடம் தாயகம் சார்ந்த இன உணர்வை பேணவும், வீரவரலாற்றை நினைவு கொள்ளவும், புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்களின் திறமைகளை ஊக்குவித்து கௌரவிக்கும் முகமாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட இவ் நிகழ்வில் பங்குபற்றி சிறப்பித்த நடுவர்கள், போட்டியாளர்கள், எழுச்சி இசை வழங்கிய கலை பண்பாட்டுக்கழக கலைஞர்கள், அறிவிப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் தேசியச் செயற்பாட்டாளர்கள் அனைவரும் இணைந்து செங்கம்பளம் விரித்த நுழைவாயிலினால் மண்டபத்திற்குள் அழைத்து வரும்போது இருமருங்கிலும் சிவப்பு மஞ்சள் கொடிகளை ஏந்திய மக்கள் உற்சாகமளித்த காட்சி நிகழ்வின் மகுடம்.

போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று "எழுச்சிக்குயில் 2014" விருதையும், தமிழ் இன அழிப்பின் அவலங்களைத் தாங்கி தமிழகத்தின் தஞ்சையில் அமைந்திருக்கும் "முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்" சென்று பார்வையிடுவதற்கான விமானப் பயணச்சீட்டையும் "தீயினில் எரியாத தீபங்களே" என்ற தமிழீழ எழுச்சிப் பாடலை பாடிய செல்வி ரம்யா சிவானந்த ராஜா அவர்கள் மண்டபம் அதிர்ந்த கரவொலியோடு தனதாக்கிக் கொண்டார்.

பங்குபற்றிய அனைவருக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து நம்புங்கள் தமிழீழம் பாடலுடன் தமிழீழத் தேசியக்கொடி இறக்கப்பட்டு, தமிழர்களின் தாரக மந்திரமான தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற கோசத்துடன் நிகழ்வுகள் கனத்த உணர்வுடன் நிறைவு பெற்றன.

இப்போட்டி நிகழ்வை வெற்றிகரமாக நடாத்த அனைத்து வகைகளிலும் முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்துப் பெற்றோர்கள் போட்டியாளர்களுக்கும்,அனுசரணையாளர்கள், ஆதரவாளர்கள், இன உணர்வாளர்கள் உள்ளிட்ட அனைத்து எமது உறவுகளையும் நன்றியன்போடு பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும், தமிழர் நினைவேந்தல் அகவமும் தெரிவித்துக் கொள்கின்றது.

## இன்று

**வைகாசி -29 வியாழக்கிழமை 12.06.2014**

திதி: சதுர்த்தசி பி.ப 11.47
நட்சத்திரம்: அனுசம்

சுப நேரம்: 7.22 - 8.52 வரை
இராகு காலம்: 1.22 - 2.52 வரை
எமகண்டம்: 5.52 - 7.22 வரை



## இன்றைய பலன்

12.06.2014

**வழங்கியவர் மணிகண்டன்**

**மேஷம்**

இன்று, உங்களுக்கு அறிமுகம் இல்லாதவரிடம், தேவையற்ற விஷயம் பேசக்கூடாது. புதிய பணிகள் உருவாகி, உங்களை அவசர கதியில் செயல்பட வைக்கும். தொழில், வியாபாரம் சீராக, சில நடைமுறை மாற்றம் செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவு, ஓரளவு கிடைக்கும். கவுரவ சூழ்நிலைகளுக்காக போட்டி, பந்தயங்களில் ஈடுபட வேண்டாம்.

**ரிஷபம்**

இன்று, உங்கள் மனதில், புதுமையான எண்ணங்கள் உருவாகும். பகைவரால் வந்த கெடுசெயலை முறியடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். சராசரி பணவரவுடன், நிலுவைப்பணம் வசூலாகும். விருந்து, விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்**

இன்று, உங்கள் மனதில் உற்சாகமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். நிலுவைப்பணி எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை சிறந்து, தாராள பணவரவைத் தரும். உறவினர்களின் வருகையால், சில நன்மை ஏற்படும்.

**கடகம்**

இன்று, சிலர் சொல்லும் தேவையற்ற ஆலோசனை, சங்கடத்தை உருவாக்கலாம். பொறுமையுடன் நடந்து கொள்வதால், நட்புக்கு குறையேதும் வராது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைய, கூடுதல் பணிபுரிவது அவசியம். சராசரி அளவில், பணவரவு கிடைக்கும். சேமிப்பு பணம், அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

**சிம்மம்**

இன்று, உங்களின் வெளி வட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். கடினப் பணிகளில், உரிய தற்காப்பு பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைக்கிற வாய்ப்பை, தவறாமல் பயன்படுத்த வேண்டும். பணவரவு சிக்கன செலவுகளுக்கு பயன்படும். ஊட்டம் நிறைந்த உணவு உண்பதால், உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**கன்னி**

இன்று, உங்கள் பேச்சில் ஆன்மிக கருத்துகள் நிறைந்திருக்கும். திகைப்பு தந்த பணிகளை, எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். கூடுதல் பணவரவு கிடைக்கும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்**

இன்று, உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதில், தாமதம் இருக்கும். இதனால், குடும்பத்தினருடன் விரக்தி மனதுடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சிறு அளவிலான குளறுபடி வந்து, பின்னர் சரியாகும். முக்கிய தேவை நிறைவேற்ற, சிறுஅளவில் பணக்கடன் பெறுவீர்கள். பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது.

**விருச்சிகம்**

இன்று, எவரிடமும் உயர்வு, தாழ்வு கருதாமல் பழகுவீர்கள். செயல்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணிபுரிவீர்கள். குடும்பச் செலவுகளை, தாராள மனதுடன் நிறைவேற்றுவீர்கள். நித்திரையில் இனிய கனவு வரும்.

**தனுசு**

இன்று, உங்களின் உறவினர், சில எதிர்பார்ப்புடன் அணுகுவர். இயன்ற அளவில் உதவி செய்து, அன்பை வளர்ப்பீர்கள். தொழில், வியாபாரம் சீராக, சில மாற்றங்களை பின்பற்றுவீர்கள். அளவான பணவரவு கிடைக்கும். மனைவியின் சேமிப்பு பணம், முக்கிய செலவுக்கு உதவும்.

**மகரம்**

இன்று, அடுத்தவர் விவகாரத்தில் கருத்து சொல்வது கூடாது. கடின உழைப்பால் மட்டுமே, தொழில் வளர்ச்சி சீராகும். வருமானத்தைக் காட்டிலும், நடைமுறைச் செலவு அதிகரிக்கும். உடல் நலனைப் பேணுவதில், அக்கறை உண்டாகும். நண்பரின் ஆறுதல், மனதில் ஊக்கம் தரும்.

**கும்பம்**

இன்று, சில நெருக்கடியான சூழ்நிலைகளை, புதிய யுக்தியால் சரி செய்வீர்கள். நல்ல பலன் கிடைத்து, சமூகத்தில் இருக்கிற மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழில், வியாபார வகையில் சிலருக்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றுவீர்கள். இயலாதவர்களுக்கு, சிறு அளவிலான உதவி செய்வீர்கள். வெகுநாள் சந்திக்க நினைத்த நண்பருடன் பேசுவீர்கள்.

**மீனம்**

இன்று, உங்கள் மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு ஊக்கம் தரும். அன்றாட பணிகளில், உத்வேகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ற வகையில், பலன் கிடைக்கும். வாகன பயணத்தில், மித வேகம் பின்பற்ற வேண்டும்.


## சிந்திக்க சில வரிகள்

**தோல்வி உன்னைத் துரத்துகிறது என்றால் –நீ வெற்றியை நெருங்குகின்றாய் என்று அர்த்தம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மனித உடலில் புதிய தசை நார் கண்டுபிடிப்பு




நமது முழங்கால் பகுதியில் இதுவரை அறியப்படாத தசைநார் ஒன்று இருப்பதை கண்டறிந்துள்ளதாக பெல் ஜியத்தின் முழங்கால் மருத்துவ நிபுணர்கள் அறிந்துள்ளார்கள். தொடை எலும்புக்கு மேல் புறத்திலிருந்து முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடைப்பட்ட முன்னங்கால் வரையான பனுதி வரை இந்த தசைநார் அமைந்துள்ளதாக மருத்துவர் க்ளஸ்ஸு", பேராசிரியர் ஜோஹன் பெல்லெமன்ஸ் ஆகிய மருந்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

நாம் நடந்து செல்லும்போது திடீரென்று திசை மாற்றி கால்களைத் திருப்பி நகர்த்தும்போது இந்த தசைநார்கள் தான் கால்களுக்கான பாதுகாப்பு அரணாக அமைகிறதாம். இப்படி ஒரு தசைநார் முழங்காலை ஒட்டி அமைந்திருக்கும் என்று நீண்டகாலமாக கருத்துக்கள் இருந்து வந்த போதிலும், இப்போதுதான் அது பற்றிய ஒரு தெளிவு ஏற்பட்டிருக்கிறது. என்கிறார் பிரிட்டனைச் சேர்ந்த முழங்கால் சிகிச்சை நிபுணர் ஜோயல் மெல்டன். மருத்துவப் பரிசோதனைகள் செய்வதற்காக தங்களது உடலை தானமாகத் தந்த 41 பேரின் உடலிலிருந்து முழங்கால்களை நுண்ணோக்கி மூலம் ஆராய்ந்தபோது இதைக் கண்டறிந்துள்ளனர். எல்லோரது முழங்கால் எலும்புகளிலும் இந்த தசைநார்கள் இருப்பதையும், அலை எல்லாம் ஒரே வடிவமைப்பில் இருப்பதையும் விஞ்ஞானிகள் பார்த்துள்ளார்கள்.

பொதுவாக விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படக்கூடிய முழங்கால் காயங்களின் போது, அவற்றை சரியாகப் புரிந்துகொள்ளவும் சிகிச்சை அளிக்கவும் இந்த தசைநாரின் அமைப்பு உதவும் என்பது மருத்துவர்கள் கருத்து. கால்களின் முன் பக்கவாட்டில் இருக்கின்ற இந்த தசைநாரில் ஏற்படுகின்ற காயங்களே ஏராளமான முழங்கால் உபாதைகளுக்குக் காரணமாக இருக்கின்றன என்பதும் க்ளஸ்ஸு" மற்றும் ஜோஹன் பெல்லொமன்ஸ் ஆகியோரின் கருத்து. கால்களில் ஏற்படும் வலி மற்றும் உபாதைகள் தொடர்பான சிகிச்சைகளுக்கு இந்தப் புதிய கண்டுபிடிப்பை எந்த அளவுக்கு பயன்படுத்த முடியும் என்பது குறித்து தீவிர ஆராய்ச்சி நடக்கிறது.

## பூமியைவிட மிகப்பெரிய கோள் கெப்ளர்-10 சி விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



வாஷிங்டன்: மனிதர்கள் வசிக்கும் இந்த பூமியை விட 17 மடங்கு எடையுள்ளதும் இரண்டு மடங்கு பெரியதுமான கெப்ளர்-10 சி என்ற புதிய கோள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந் தக் கோள் 45 நாளுக்கு ஒரு முறை சூரியனைப்போன்ற ஒரு நட்சத்திரத்தை சுற்றி வருகிறது. பூமிக் கோளில் இருந்து இது 560 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.

அதாவது, 1 ஒளி ஆண்டு என்பது சுமார் 6 டிரில்லியன் மைல் தொலைவு ஆகும். இந்த புதிய கோளின் சுற்றளவு 18 ஆயிரம் மைல்கள் ஆகும்.

பூமியைவிட பலமடங்கு பெரிய கோள் கெப்ளர்-10 சி- கோளை ஹார்வர்டு ஸ்மித்சானியன் வானியல் பவுதிக மையத்தை சேர்ந்த ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
மேலும் இந் தக் கோள் தொடர்பான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## மனித உணர்ச்சிகளை அறிந்துகொள்ளும் புதிய ரோபோ ஜப்பானில் அறிமுகம்

உலகில் உள்ள மிகப்பெரிய ரோபோ சந்தைகளில் ஜப்பானும் ஒன்றாகும். கடந்த வருட கணக்கீட்டின்படி இந் நாட்டின் மொத்த வணிக சந்தை மதிப்பீடு 860 பில்லியன் யென்னாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறப்பு விகிதம் குறைந்தும், வயதனவர்களின் மக்கள் தொகை அதிகரித்தும் காணப்படும் காலகட்டத்தில் ரோபோக்களின் தேவை இன்னமும் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து சம்பளவிகிதம் அதிகரித்து வருவதுமட்டுமின்றி, வீடுகளில் வயதானவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியும் இந்த ரோபோக்கள் அங்கு பயன்படுத்தப்படுகின்றன.

இதுபோன்ற பயன்பாடுகளில் மனித உணர்ச்சிகளை அறிந்துகொள்ளும் பெப்பர் என்ற புதிய ரோபோவை ஜப்பானின் சாப்ட்பேங்க் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு அமைப்பும், உணர்ச்சிகளை அறியும் ஒரு புதிய தொழில்நுட்பமும் இதில் பயன்படுத்தப்படுவதால் இந்த ரோபோவினால் ஒருவரின் சைகைகள், உணர்ச்சி வெளிப்பாடுகள், குரல் தொனிகள் போன்றவற்றை அறிந்துகொள்ள இயலும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால் குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும் தொடர்பு கொள்வதுபோல் இந்த ரோபோக்களிடமும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும் என்றும், அது பல்வேறு பணிகளையும் செய்யும் திறமை கொண்டது என்றும் சாப்ட் பேங்க் குறிப்பிட்டுள்ளது.1,98,000 யென் விலை கொண்ட இந்த ரோபோ அடுத்த வருடம் பொதுமக்கள் விற்பனைக்கு வர உள்ளது.

எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் இருப்பவர்களை இதயமற்ற ரோபோக்கள் என்று மக்கள் குறிப்பிடுவதுண்டு. ஆனால் முதன்முறையாக உணர்ச்சிகளையும், இதயத்தையும் கொண்ட ரோபோ தங்களால் அறிமுகப் படுத்தப்படுகின்றது என்று இந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான மசயோஷி சோன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இன்று முதல் தங்களுடைய விற்பனை நிலையங்களில் இந்த வகையான ரோபோக்களின் மாதிரிகளை காட்சிக்கு வைத்து வாடிக்கையாளர்களை அவற்றுடன் தொடர்புகொள்ள வைக்கும் திட்டத்தையும் இவர்கள் செயல்படுத்த உள்ளனர்.

## விமானத்தை உருவாக்கியது ரைட் சகோதரர்களா? மறைக்கப்பட்ட உண்மை!

இது ஒரு புதிய தொடர் பதிவு : அறிந்ததும் மறந்ததும் என்ற தலைப்பில் நாம் அறிந்த அறிவியல் விஞ்ஞானத்தையும் அதை சார்ந்த நம்ப முடியாத ஆனால் உண்மையாக இருக்க கூடியதுமான விடையங்களைப்பற்றி பேச உள்ளோம். ஏற்கனவே ஏலியன்ஸ், லெமுரியா பதிவுகளில் இவ் விடையங்களை தொட்டிருந்தேன். ஆனால் இங்கு தெளிவாக பேசலாம். இப் பேச்சு "நம் அறிவில்" பற்றி பலர் சிந்திக்க உதவும் என்ற நம்பிக் கையில் தொடர்கிறேன்.

விமானம், அனைவரும் அறிந்த ஒன்று இன்றைய உலகம் சுருங்க முக்கிய காரணமாக அமைந்த ஒரு சாதனம். பறவை வாணில் பறப்பதை பார்த்து நாம் ஏன் அது போல் ஒரு சாதனத்தை உருவாக்க முடியாது என்ற கேள்வி எழுந்ததன் விளைவாக 17 டிசம்பர் 1903 ஆம் ஆண்டு ஓர்வில் ரைட் மற்றும் வில்பர் ரைட் என்ற இரட்டை சகோரதர்கள் விமானத்தை உருவாக்கி உலகையே வியக்க செய்தனர். இது இருக்கட்டும் அனைவரும் அறிந்த தகவல் தான், ஆனால் விமானத்தை இவர்களுக்கு முதலே இன்னொருவர் உருவாக்கிவிட்டார் என்று வரலாற்று சான்றுகளுடன் சிலர் கூறுகின்றனர்.

நியூசிலாந் தை சேர்ந்த ரிச்சர்ட் பியர்ஸ் (Richard Pearce) என்ற இயந்திரவியலாளர் 31 மார்ச் 1903ஆம் ஆண்டு முதலாவது விமானத்தை பரிசோதித்துள்ளார்.

ஆனால் அவரிடம் புகைப்பட ஆதாரங்கள் இருக்கவில்லை. மீண்டும் விமானத்தில் மாற்றங்களை செய்து 11 மே 1903 ஆம் ஆண்டு பலர் முன்னிலையில் விமானத்தை இயக்கி காட்டினார், ஆனால் தரையிறக்கும் போது விமத்திற்குள்ளானதில் விமானம் முற்றாக சேதமடைந்தது. மீண்டும் அதை சரி செய்து இயக்குவதற்கு முன்னர், ரைட் சகோதரர்கள் முந்திக்கொண்டனர். இது பலரும் அறியாத ஒரு வரலாற்று தகவல். ஆனால், நாம் இங்கு பார்க்க நினைப்பது அது அல்ல நம் இராமாயணத்தில் விமானங்கள் பற்றி பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக இராவணன் பயன்படுத்திய புஷ்பக விமானத்தை கருதலாம். மனிதர்களை ஏற்றிக்கொண்டு பறக்கும் சாதனம் அப்போதே பயன்பாட்டில் இருந்துள்ளதிற்கு இது ஒரு உதாரணம். ஆனால், சான்றுகள் / படிவுகள் என்று பார்த்தால் இந்த உதாரணத்தின் பெறுமதி இன்றைய திகதி வரைக்கும் பூச்சியம் தான். அதனால், நாம் இராமாயணத்தை கொண்டு விமான தொழில் நுட்பத்தை பற்றி விவாதிப்பது பொருத்தமற்ற ஒன்று.



ஆனால், விவாதிப்பதற்கு எகிப்து இருக்கிறது! எகிப்து சுமார் 10000–5000 ஆண்டுகளுக்கு முட்பட்ட ஒரு ராச்சியத்தின் எச்சங்களை கொண்டு இன்றும் உலகின் தொழில் நுட்பத்திற்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் ஒரு மர்ம பூமி என்று சொல்லலாம்.

எகிப்திய பிரமிட்டுக்கள் அதன் அமானுட தொழில் நுட்பத்திற்காக இன்று வரை ஆராயப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அப்படி எகிப்தை ஆராய்ந்த போது அச்சு அசலாக இன்றைய விமானத்தை ஒத்த பல உருவங்கள்/ பொம்மைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உருவங்களையே.) (இங்கு இருக்கும் படங்களில் நீங்கள் காண்பது எகிப்திய அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட உருவங்களையே.) இந்த உருவங்கள். நிச்சயமாக உங்களிடையே பல கேள்விகளை உருவாக்கும். விமானத்தை 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாம் கண்டு பிடித்து கொண்டாடினோம்.

ஆனால், பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நம் முன்னோர் விமானத்தை பயன்படுத்தியுள்ளனரே அது எப்படி? அந்த அளவிற்கு தொழில் நுட்ப அறிவு இருந்திருந்தால் பிற்காலத்தில் அது ஏன் அழிந்தது? என்ற பல கேள்விகள் எழும். சிலர் நினைக்கலாம், பெரிய அளவில் விமானங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை வெறும் உருவ பொம்மைகள் தானே, அது அவர்களின் கற்பனை உருவங்களாகவும் இருக்கலாம் என்று. ஆனால், அந்த சின்ன உருவங்களை கவணமாக பார்த்தோமானால் மேலும் வியப்பு காத்திருக்கிறது.
ஆம், அதன் செட்டைகள் மற்றும் பின்புற அமைப்பு என்பன இன்றைய விமான அமைப்பை 100% ஒத்துள்ளது. ( காற் றில் விமானம் தளம்பாது பயணிக்க உதவும் பின் புற அமைப்பைக்கூட அந்த பொம்மையில் வடித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழம்: முள்ளிவாய்க்காலுக்குப் பின் 5 ஆண்டுகள்

முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்து மே மாதத்தோடு ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. இனப் படுகொலை நடந்த அந்த நிலத்தில் ஒரு தீபத்தை ஏற்ற அனுமதிக்க முடியாது என்று போர் வெற்றிக் கொண்டாட்டங்களை வெறித்தனமாக நடத்தி தோற்கடிக்கப்பட்ட ஒரு இனத்தை மிகவும் மோசமாக காயப்படுத்தியது ஸ்ரீலங்கா அரசு. ஆனாலும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாட்களை உலகம் எங்கும் வாழும் தமிழர்கள் நினைவு கூர்ந்துள்ளனர். இலங்கை அரசின் முள்ளிவாய்க்கால் நாட்கள்மீதான கடுமையான நவடிக்கைதான் அந்த நாட்களை ஈழத்து மக்களை முள்ளிவாய்க்கால் நினைவுகளில் மூழ்கச் செய்தது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என்பது அரசியல் ரீதியாக ஒரு மிகப் பெரும் அர்தத்தையும் கொடுக்கிறது. வரலாற்றில் மிகப் பெரிய செய்தியை கொடுக்கிறது. முள்ளிவாய்க்காலை எப்படி விளங்கிக் கொள்வது என்பது மிகவும் முக்கியமானது. இலங்கை அரசின் இனப்படுகொலையின் உச்ச கொடூரமான முள்ளிவர்க்கால் படுகொலை, ஈழ மக்களை சிங்கள அரசுகள் எப்படி நடத்துகின்றன என்பதையும் எப்படி அழிக்கின்றன என்பதையும் ஈழ மக்களின் போராட்டத்திற்கு எப்படியான முறையில் பதில் அளிக்கின்றன என்பதையும் உணர்த்துகிறது.

**முள்ளிவாய்க்காலுக்கு முன்னர்**

இந்த இனப்படுகொலை ஏன் நிகழ்த்தப்பட்டது என்பதே வரலாறு மீது எழும் கேள்வி. இலங்கைத் தீவின் பூர்வீக இனம் ஈழத்தமிழினம். இலங்கையில் சிங்களவர்களுக்கு முன்பாகவே வாழ்ந்த ஈழத்தமிழினம் பிரித்தானிய ஆட்சியாளர்களினால் பலவந்தமாக ஒரு தீவாக இணைக்கப்பட்டது. ஈழத் தமிழினம் இந்த தேசத்தின் பூர்வீக இனம் என்பதற்கான ஆதாரங்கள் நாடு முழுவதும் இருக்கின்றன. ஈழத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பன்னெடுங்காலமாக யுத்தமும் முரண்பாடுகளும் நிலவிவந்தன. சிங்களவர்கள் காலவோட்டத்தில் தெற்கில் நிலை கொண்டதுடன் தமது இனத்திற்கான அடையாளங்களை அங்கு உருவாக்கினர்.

அந்நியராட்சியில் ஈழம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டு சிலோனாக உருவாக்கப்பட்டதே ஸ்ரீலங்கா. பிரித்தானியர்களிடமிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டத்தில் சிங்களவர்களைவிடவும் தமிழர்களே முன்னின்றனர். அதற்கு முன் தமிழர்களே இலங்கையின் பெரும் பொறுப்புக்களில் இருந்தனர். பிரித்தானியாவிடமிருந்து விடுதலைபெற்ற போது இந்த நாட்டை அவர்கள் முன்பிருந்தபடி பிரிக்க இணைந்தே வாழ்கிறோம் என்றது தமிழர் தரப்பே.

ஆனால் சுதந்திர ஸ்ரீலங்காவில் தமிழர்களின் உரிமைகளை வழங்காமல் எல்லாவற்றையும் தமக்குள் சுருட்டிக் கொண்டது ஸ்ரீலங்கா என்ற சிங்கள தேசம். ஈழமும் சிங்கள தேசமும் இணைக்கப்பட்டு ஸ்ரீலங்கா உருவாக்கப்பட்டபோதும் சிங்கள தேசமே ஸ்ரீலங்காவாக இருந்தது. அது சுதந்திரற்குப் பின்னர் ஈழம் என்ற தேசத்தையும் இனத்தையும் அழிக்கும் நடவடிக்கைகளை தொடங்கியது. இனப்படுகொலைகளுக்கான தொடக்கங்களான முரண்பாடுகள் சுதந்திரற்கு முன்பு தொடங்கிவிட்டது. முள்ளிவாய்க்காலில் உச்சம் கொண்ட இனப்படுகொலை என்பது 1950களிலேயே ஆரம்பித்துவிட்டது. சுதந்திர ஸ்ரீலங்கா ஈழத் தமழிர்களை அடிமைப்படுத்தி அழித்து ஒழிக்கும் நாடானது என்பது வரலாற்றின் மிகப் பெரிய துயரமும் கசப்பும்.

ஈழத் தமிழினத்தை அழிக்க ஒடுக்க அவர்களின் தாயகப் பரப்பை அபகரிக்கவும் அவர்களின் வரலாறு பூர்வீகம் அடையளாங்கள் என்பவற்றை அழித்து முழுமையான ஒரு இன அழிப்பை மேற்கொள்ளளவே சுதந்திர ஸ்ரீலகாவின் பின்னரான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டன. நில அபகரிப்பின் மிச்சம்தான் முள்ளிவாய்க்கால் வரையான நில அபகரிப்பு யுத்தம். இன அழிப்பின் உச்சம்தான் முள்ளிாய்க்கால் வரையான படுகொலை. தமிழ் மக்களின் தலைமைத்துவ அழிப்புத்தான் உலகத்துடன் இணைந்து புலிகளை முள்ளிவாய்க்காலில் அழித்த நடவடிக்கை.

**அபிவிருத்தியால் படுகொலைய மறைக்க முடியுமா?**

எனவே முள்ளிவாய்க்காலுக்கான விதை என்பது இப்படித்தான் உருவாகியுள்ளது. முள்ளிவாய்கால் இனப்படுகொலை இன்று உலக அரங்கில் நியாயத்தை கோரிக் கொண்டிருக்கிறது. மூடி மறைக்க முடியாத பெரும் குற்றமாக நிலைத்துவிட்டது. இத்தகைய போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலையை மறைக்க இலங்கை சனாதிபதி மகிந்த ராஜபக்ச வடக்கு கிழக்கில் சில அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். எனவே ஈழ மண்ணில் ராஜபக்ச செயயும் அபிவிருத்தி என்பதே மனிதப் படுகொலையை சீமெந்தால் மூடி மறைத்து கல்லறை கட்டும் அபிவிருத்திதான். அந்தக் கல்லறையில் ஈழம் என்ற தேசத்தையும் தமிழ் இனத்தையும் அந்த இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிபபுக்களையும் அந்த இனத்தின் போராட்டத்தையும் அடக்கம் செய்வதே ராஜபக்சவின் அபிவிருத்தி.

ஸ்ரீலங்காத் தலைநகர் கொழும்பில் உள்ள பிரதான புகையிரத நிலையம் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. ஆனால் வடக்கின் ரயில் நிலையங்கள் மிகவும் தரமாக புனரமைக்கப்படுகிறது. தெற்கில் உள்ள ரயில் நிலையங்கள் என்ன நிறத்தில் உள்ளன என்று தெரியாத மகிந்த ராஜபக்ச கிளிநொச்சிக்கு முதல் ரயில் டிக்கட் எடுத்து பிரயாணம் செய்து ரயில் நிலையத்தை திறக்கிறார். தான் இழைத்த இனப்படுகொலையை மறைக்க மகிந்த ராஜபக்ச இதையெல்லாம் செய்ய வேண்டி இருக்கிறது. அதனால் அவர் கிளிநொச்சி சந்தையை திறக்கவும் கிளிநொச்சி வீதியை திறக்கவும் வர வேண்டியிருக்கிறது.

ரயில் பாதைகளையும் ஏ-9 வீதியையும் உங்களுக்கு தந்தேன் என்று பெருமையாக ராஜபக்ச குறிப்பிடுகிறார். சுதந்திரம் பெற்ற ஸ்ரீலங்காவில் சிங்களப் பேரினவாதததிடமிருந்து உரிமையை கோட்டு ஈழத்தமிழனம் போராடத் தொடங்கியபோதும் பாதைகளும் ரயில் நிலையங்களும் இருந்தன. ஈழ மக்கள் இன ஒடுக்குமுறைக்கு எதிராக விடுதலையை கோரிப் போராடினார்களே தவிர ஏ-9 பாதையையும் ரயிலையும் கேட்டுப் போராடவில்லை. ஆனால் இலங்கையை ஆண்ட அரசுககள்தான் உரிமையும் விடுதலையும் கேட்டால் வீதியை மூடுவோம், உணவையும் மருந்தையும் பறிப்போம் என்றன. ராஜபக்சவே உரிமை இல்லை என்று வெளிநாடுகளின் நிதியில் புனரமைக்கப்பட்ட வீதியையையும் ரயிலையும் தந்து இனப்படுகொலையை மறைக்கிறார்.

**வடக்கு மாகாண சபையும் முள்ளிவாய்க்காலும்**

வடக்கு மாகாண சபையைகூட தமிழர்களுக்கு விட்டுக் கொடுக்க மனமில்லாதவர்தான் மகிந்த ராஜபக்ச. அதனால்தான் போர் முடிந்து நான்கு வருடங்கள் கடந்த பின்னர் தேர்தல் வைத்தார். வடக்கு மாகாண சபை எந்த அதிகாரமும் அற்ற கட்டிடம். அங்கு ஈழத் தமழிர்களின் பிரச்சினையை பேசவும தீர்க்கவும் ஸ்ரீலங்கா சட்டத்தால் தடைவிதிக்கப்பட்ட இடம். அந்தக் கதிரைகளையும் அபகரிக்காமல் அதில் எம்மவர்கள் உட்கார்ந்திருக்கிறார்களே தவிர அதில் வேறு எதுவும் இல்லை.

முள்ளிவாய்க்கால் இனப்படுகெலையை மறைக்க வடக்கு மாகாண சபையை ராஜபக்ச பயன்படுத்த நினைத்தார். வடக்கில் சந்தைகளையும் ரயில் நிலையத்தையும் வீதியையும் திறந்து வைத்தன் மூலம் தமிழ் மக்களின் மனங்களில் இடம்பிடித்து வடக்கு மாகாண சபையில் வென்று தமிழ் மக்களை நான் இனப்படுகொலை செய்யவில்லை என்பதை உலகத்திற்கு காட்ட முயன்றார் ராஜபக்ச. ஆனால் ஈழ மக்களோ எங்களை படுகொலை செய்த இனப்படுகொலையாளி போர்க் குற்றவாளி மகிந்த ராஜபக்ச என்று தீர்ப்பளித்து மகிந்தவுக்கு படுதோல்வியை கொடுத்து உலகத்திற்கு இந்த செய்தியை சொன்னார்கள்.



இனப்படுகொலையாளி என மக்கள் தீரப்பளித்த மகிந்த ராஜபக்சவின் முன்னால் நல்லிணக்க வெளிப்பாடுடன் பதவிப் பிரமாணம் செய்து தமிழ் மக்களை பெரும் காயப்படுத்தினார் முதலமைச்சர் விக்கினேஸ்வரன். அவர் ஈழப் பிரச்சினையை அறியாதவராகவும் சிங்களப் பேரினவாதத்தின் கொடூர முகத்தை புரியாதவராகவும் இருந்ததுடன் இராணுவம் ஆட்சி புரியும் வடக்கில் தான் ஒரு அரசியல் பொம்மை என்பதை உணர்ந்து உடைந்த கதிரையில் இருக்கிறேன் என்றார்.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட இனப்படுகொலைப் போரில் அநியாயமாகக் கொல்லப்பட்ட மக்களுக்கு ஒரு அஞ்சலியை ஏற்ற முடியாத அதிகாரத்தையும் ஆட்சியையும் கொணடதே வடக்கு மாகாண சபை. இறந்துபோனவரகளுக்காக ஒரு தீபத்தை ஏற்றக்கூட தமிழீழம் தான் வேண்டும் என்பதையே சிங்கள அரசு எங்களுக்கு உணர்த்துகிறது.

**காணாமல் போனவர்களுக்கு மரணப்பத்திரம்**

இந்தநாட்களில் காணாமல் போன எனது நண்பன் ஒருவனின் வீட்டுக்குச் சென்றேன். சில நாட்களின் முன்பு அவனது வீட்டுக்குச் சென்ற கொழும்பில் இருந்து வந்த சில அரச அதிகாரிகள் ஒரு விண்ணப்படிவத்தில் கையெழுத்திடுமாறு கேட்டிருக்கிறார்கள். அது மரண அத்தாட்சிப் பத்திரத்திற்கான விண்ணப்பம். இதற்காக ஒரு லட்சம் இழப்பீடு தருவாதாகவும் அவர்கள் என் நண்பனின் அம்மாவிடம் சொல்லியிருக்கிறார்கள். அந்ததாய் துடித்துப் போய்விட்டார். உங்கள் பிள்ளை இனியும் திரும்பமாட்டார். அவர் உயிரோடு இல்லாமல் இருக்கலாம். நீங்கள் அவரை நினைத்துக் கொண்டிருப்பதும் அவருக்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதும் இனக்குரோத்த்தை வளர்க்கும். உங்கள் கவலைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் எனவே கையெழுத்திடுங்கள் என்றார்களாம் அந்த அதிகாரிகள்.



காணாமல் போனவர்களுக்கு மரணப் பத்திரம் கொடுக்கிறார்கள். இறந்தவர்களின் தடயங்களை அழிக்கிறார்கள். எந்த நிலையிலும் தமிழர்களை இல்லாமல் செய்வதே இலங்கை அரசின் நோக்கம். காணாமல் போன ஒருவனின் கதையை ஒரு லட்சத்துடன் முடிக்க நினைக்கிறது மகிந்த அரசு. அவனுக்கான போராட்டத்தை அவன் பற்றிய கண்ணீர்கதையை காத்திருத்தலை ஒலு லட்சதால் முடிவுக்கு கொண்டு வரலாம் என்று இவர்கள் வடக்கு கிழக்கை நோக்கி வருகிறார்கள்.

எங்கள் பிள்ளை உயிரோடு வருவான் அவனுக்கு நீதி வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இன்னமும் உயர் வாழ்கிறோம் என்று சொல்லி அவர்களை கடுமையாக ஏசி களைத்துவிட்டதாக சொல்லி அழுதுகொண்டிருந்தார். முள்ளிவாய்க்கால் யுத்த நாட்களில் யுத்த களங்களில் இலங்கை அரச படைகளால் கைது செய்யப்பட்டவர்களும் இலங்கை அரச படைகளிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கும் மரண அத்தாட்சிப் பத்திரத்தை வழக்கிக் கொண்டு காணாமல் போனவரகளின் உறவினர்களின் போராட்டத்தை ஒடுக்கி அவர்களை சிறையில் அடைக்கிறது சிங்கள அரசு.

**தமிழர் தாயகம் அகபரிப்பு**

தமிழர்களின் தாயகத்தை அபகரிக்கும் நடவடிக்கைகள் சுகந்திர ஸ்ரீலங்காவுக்கு முன்னராகவே ஆரம்பித்துவிட்டது. ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கில் அறுபது வீதமான பகுதிகள தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமையினால் அந்தப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் தடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சபையின் விசேட அமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
வடமாகாணசபையின் நிதி நியதிச்சட்டம் தொடர்பான 2ம், 3ம் வசிப்புக்களுக்காக கூட்டப்பட்ட மாகாணசபை கூட்டம் ஆளுநர் அனுமதி வழங்காத நிலையில் ஒரு மணி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், ஆளுநர் அனுமதிக்காக 2 வாரங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் வடமாகாண சபையினால் உருவாக்கப்பட்ட நிதி நியதிச் சட்டம் மற்றும் முத்திரை வரி கைமாற்றுச் சட்டம், முதலமைச்சர் நிதி சட்டம் ஆகிய வற்றுக்கான 2ம், 3ம் வாசிப்புக்களுக்கான விசேட அமர்வு கூட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி சட்டமூலங்களுக்கான அங்கீகாரம் கோருவதற்கான ஆளுநருக்கு சட்டமூலங்கள் அனுபபி வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் மேற்படி சட்டமூலங்களுக்கான அங்கீகாரம் வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கால அவகாசம் கேட்டுள்ளார்.

எனவே இன்றைய தினம் கூட்டப்பட்ட மாகாணசபையின் விசேட அமர்வு எதிர் வரும் 26ம் திகதி இருநாள் அமர்வாக மாற்றப்பட்டு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆளுநருக்கு கால அவகாசம் தொடர்ந்தும் வழங்க முடியாது.

நாடாளுமன்றில் அவசர சட்டமூலம் நிறைவேற்றப்படுவதனைப் போன்று ஆளுநருக்கு ஒரு கால அவகாசம் வழங்கப்பட்டு அதற்குள் அவை மீளப்பெறப்பட்டு சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உருவாக்கப்பட்டுள்ள நிதி நியதிச்சட்டமூலம் உள்ளிட்ட சட்டமூலங்கள் கிழக்கு மாகாணத்தில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டமூலங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதுடன், கடந்த 5ம் திகதியும், 9ம் திகதியும் இவை ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் தத்தளித்த கிளிநொச்சி இளைஞன் மீட்பு புலனாய்வு பிரிவினர் தீவிர விசாரணை



(கிளிநொச்சி)
இராமேஸ்வரம் கடலில் தத்தளித்த கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை மீனவர்கள் காப்பாற்றியுள்ளனர். கிளிநொச்சி அம்மன்புரம் பகுதியை சேர்ந்த வசீகரன் என்ற இளைஞனே இவ்வாறு கடலில் தத்தளித்தவேளை காப்பாற்றப்பட்டுள்ளார்.

இன்று காலை இராமேஸ்வரம் ஓலைக்குடா பகுதி நாட்டுப்படகு மீனவர்கள் மீன் பிடிக்க சென்றபோது கடலில் தத்தளித்து கொண்டு இருந்த குறித்த இளைஞனை மீட்டு, உடனடியாக சங்குமால் கடற்கரை பகுதிக்கு கொண்டு வந்து முதலுதவி சிகிச்சை அளித்துள்ளனர்.

அதன் பின்னர் வசீகரனை கடற்கரை பாதுகாப்பு குழும பொலிஸாரிடம் மீனவர்கள் ஒப்படைத்தனர். பொலிஸார் வசீகரனை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.
பொலிஸார் வசீகரனிடம் நடத்திய முதல் கட்ட விசாரணையில், தான் சென்னை உத்தண்டி பகுதியில் வசித்து வருவதாகவும், இலங்கை செல்வதற்காக பாம்பன் பகுதியில் இருந்து மீன்பிடிக்க சென்ற படகு ஒன்றில் சென்றதாக தெரிவித்துள்ளார்.

பின்னர், அந்த படகு நடுக்கடலில் சென்று கொண்டிருந்தபோது ரோந்து பணியில் அப்பகுதியில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படையினரின் சோதனையில் இருந்து தப்பிக்க படகில் இருந்த மீனவர்கள் வசீகரனை கடலில் தள்ளிவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வசீகரன் கூறிய தகவல்கள் உண்மையா அல்லது அவர் இலங்கையில் இருந்து வந்துள்ளாரா? என்பது குறித்து புலனாய்வு துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா மாணவன் தெஹிவளையில் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியாவைச் சேர்ந்த மாணவன் ஒருவர், தெஹிவளை அல்விஸ் வீதியிலுள்ள நான்கு மாடி கட்டிடத்தின் கீழிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர், கணனி விஞ்ஞானம் துறையில் பயின்றுகொண்டிருப்பவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். நண்பர்களுடன் இரவு தூங்கிக் கொண்டிருந்த குறித்த நபர் கட்டத்திலிருந்து கீழே விழுந்து விட்டாரா அல்லது கொலைசெய்யப்பட்டு கீழே கொண்டுவந்து போடப்பட்டாரா என்பது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தில் கீறல் காயங்கள் சில இருப்பதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்ட கொள்ளைக் குழு கைது

(யாழ்ப்பாணம்)
யாழில் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் இளைஞர்கள் கும்பல் குடா நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரும் கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்தவாரம் யாழ்.அரியாலை புறுடி வீதியில் உள்ள வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் அந்த வீட்டில் இருந்த வயதான பெண்ணை வெட்டிக் கொலை செய்த பின்னர், பெருமளவு நகை மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது 2006ம், 2007ம் ஆண்டுகளில் ஐந்து சந்திப் பகுதியில் பல கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டு யாழ். நீதிமன்றினால் கண்டதும் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்ட பேபி என்ற நபரின் சகோதரன் தலைமையிலான குழுவினரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் யாழ். நகரப் பகுதி மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தாம் தொடர்புபட்டிருப்பதை அக்குழுவினர் ஒப்புக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒப்புக் கொண்ட குற்றங்களில் 7 குற்றங்கள் மோசமானவை ... பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பளையில் வாள்வெட்டு ஒருவர் உயிரிழப்பு மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
இருவருக்கிடையில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துடன் மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை, தம்பகாமம் பகுதியில் இன்று காலை 7.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த முத்தையா திலீபன் (வயது 26) உயிரிழந்துள்ளதுடன் சிவதாஸ் (வயது 30) படுகாயமடைந்து நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, இவ் இருவருக்கிடையில் பணக் கொடுக்கல் வாங்கல் இருந்ததாகவும் இந்த பணத்தை மீளப்பெறச் சென்ற வேளை இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் ஒருவரை ஒருவர் கத்தியால் குத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

## வடமாகாண சபை இணையத்தளம் “ஹேக்“ செய்யப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)
வடமாகாண சபையின் உத்தியோக பூர்வ தளமான www.np.gov.lk என்ற இணையத்தளம் “ஹேக்” செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இணையத்தளம் கடந்த வெள்ளிக்கிழமை ஹேக் செய்யப்பட்டிருந்த நிலையில் மீண்டும் இயங்கியது.

இந்நிலையிலேயே மீண்டும் அந்த இணையத்தளம் ஹேக் செய்யப்பட்டுள்ளது.
குறித்த இணையத்தளத்தினை உபயோகப்படுத்துவது, ஆளுநர் அலுவலகம் என்றும் அவர்களிடம் கேட்டால் தான் இதற்குரிய காரணம் தெரியும் என வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இந்தநிலையில் வடமாகாண ஆளுநர் அலுவலகம் இது தொடர்பில் தங்களுக்குத் எதுவும் தெரியாது எனப் பதிலளித்துள்ளது.

## கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த ரயிலில் கொள்ளை சம்பவம்

(யாழ்ப்பாணம்)
கொழும்பில் இருந்து ரயிலில் யாழ்ப்பாணம் வந்த நபர் தனது உடமைகளை இழந்த பரிதாபகரமான சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து பளைக்கு கொக்குவில் கிழக்கை சேர்ந்த குருநாத பிள்ளை பகீரதன் (வயது - 48) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு ரயிலில் பயணித்துள்ளார். இடையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நல்லவர்களைப்போல நடித்து அருகில் வந்திருந்த சிலர் மயக்க மருந்தை சூட்சுமமாக அவர் மீது வீசி தங்கச் சங்கிலியை திருடிக்கொண்டு மாயமாகி விட்டனர். நடந்தது எதுவுமே தெரியாத பகீரதன் மயக்கம் தெளியாமலே நேற்று காலை பளை ரயில் நிலையம் வரை வந்துள்ளார்.

பயணிகள் அனைவரும் இறங்கியதும், ரயில்வே அதிகாரிகள் அடுத்த பயணத்துக்காக ரயிலை தயார் செய்த போது அங்கு ஒருவர் மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டு அவருக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கினர். மயக்கம் தெளிந்து எழுந்த பகீரதன், "கொழும்பில் இருந்து புறப்பட்ட சில மணித்தியாலயங்களின் பின்னர் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது" என அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

## பக்தர்கள் புடை சூழ, நேர்த்திகளுடன் வற்றாப்பளையில் வரலாற்றுப் பொங்கல்





(முல்லைத்தீவு)
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழாவில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். அத்துடன் தமது பல்வேறு வகையான நேர்த்திகளையும் நிறைவு செய்தனர்.

நேற்று முன்தினம் திங்கட் கிழமை காலை முதல் ஆரம்பமாகிய பொங்கல் நேற்று செவ் வாய்க்கிழமை அதிகாலை வரை இடம்பெற்றது.

சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பொங்கல் பொங்கிப் படைத்தார்கள். ஆலய சுற்றாடல் எங்கும் பொங்கல் ... காரணமாகவும் வாசலில் ... கொளுத்தியமையாலும் புகை மண்டலமாகக் காணப்பட்டது. என்றும் இல்லாத அளவுக்கு நேற்றுப் பகல் ஆரம்பமாகிய தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள், சப்பாணிக் காவடிகள், பிள்ளைக் காவடிகள், சயனக் காவடிகள் என சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட காவடிகள் கிளிநொச்சி மாவட்டம் உட்பட வன்னி மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் எடுத்துவரப்பட்டன.

சிறுவர்கள் முதியவர்கள் என வேறுபாடு இன்றி ஆயிரக்கணக்கான காவடிகள் மற்றும் பாற் செம்புகள் கற்பூரச் சட்டிகள் என்பனவும் எடுத்து வரப்பட்டன. பெண் ஒருவர் இரண்டாவது தடவையாகவும் தூக்குக் காவடி எடுத்து தனது நேர்த்தியை நிறைவேற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிக வயதான மனிதர் 111வது வயதில் மரணம்



(நியூயார்க்)
அமெரிக்காவில் மன் நாட்டனில் உள்ள எஸ்பிள நாடு பகுதியை சேர்ந்தவர் அலெக்சாண்டர் இமிச். 111 வயது முதியவர். உலகிலேயே மிக வயதானவர் என்று அறிவிக்கப்பட்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இவரது பெயர் இடம் பெற்றிருந்தது.

இந்த நிலையில் இவர் நேற்று தனது வீட்டில் மரணம் அடைந்தார். கடந்த 1903ம் ஆண்டு போலந்து நாட்டில் செஸ்டோசோவா என்ற இடத்தில் பிறந்தார். நாசி படைகளின் தாக்குதலை தொடர்ந்து அங்கிருந்து தனது மனைவியுடன் வெளியேறினார். 1950ம் ஆண்டில் கானக்டிகட்டில் வாட்டார்பரியில் குடியேறினார். இவர் முதல் மற்றும் இரண்டாம் உலகப் போரின் போது உயிர் வாழ்ந்தவர் என்ற பெருமை பெற்றவர்.

# ரஷ்யா, உக்ரைன் இடையே எரிவாயு குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி



(பிரஸ்ஸல்ஸ்)
கடந்த ஆண்டு இறுதியில் உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவது அந்நாட்டு அதிபரால் தடைப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன. உக்ரைனின் கிழக்குப் பிராந்தியமான கிரிமியா உலக நாடுகளின் எதிர்ப்புகளுக்கிடையே ரஷ்யாவுடன் இணைந்தது.

இதனால் அமெரிக்கா உட்பட பல மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவிற்கு பொருளாதாரத் தடைகளை விதித்தன. உக்ரைனுக்கான எரிவாயுத் தேவைகளின் பெரும் பகுதி ரஷ்யாவிலிருந்து வருவதால் ரஷ்ய அரசு நிறுவனமான கஸ்ப்ரோம் கடந்த மார்ச் முதல் அதன் விலையை 80 சதவிகிதம் உயர்த்தியது.

அதுமட்டுமின்றி அதற்கு முன்னால் செலுத்தவேண்டிய பாக்கியையும் உக்ரைன் உடனடியாக செலுத்தாவிட்டால் சப்ளையை நிறுத்திவிடுவதாகவும் அந்நிறுவனம் எச்சரித்தது. பிப்ரவரி, மார்ச் மாத எரிவாயு சப்ளை பாக்கிக்காக உக்ரைன் இதுவரை 786 மில்லியன் டாலர்களைச் செலுத்தியுள்ளது.
இருப்பினும் இன்னும் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை குறித்தும் அதன்பின்னர் ஏப்ரலில் இருந்து நிர்ணயிக்கப்படும் புதிய விலை குறித்தும் இரு நாடுகளும் இணைந்து தீர்மானிக்க வேண்டியிருந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று இரு நாட்டின் உயர்மட்ட அதிகாரிகளும் பிரஸ்ஸல்சில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

ரஷ்யாவின் கஸ்ப்ரோம் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி அலெக்சேய் மில்லரும், உக்ரைன் நப்டகோஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஆண்ட்ரி கொபோலேவும் இதில் பங்கு பெற்றனர். ஒப்பந்தத்தில் காணப்பட்ட அனைத்து பிரச்சினைகளும் விவாதிக்கப்பட்டபோதும் ஏழு மணி நேரம் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் எரிசக்தி ஆணையர் குயந்தர் ஒட்டிங்கர் தெரிவித்தார். இன்று அல்லது நாளை இந்தப் பேச்சுவார்த்தை தொடரக் கூடும் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார்.


# 20 பெண்களை துப்பாக்கி முனையில் கடத்திய போகோஹரம் தீவிரவாதிகள்

(மைடுகுரி)
வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள சிபோக் நகரத்தில் துப்பாக்கி முனையில் 20 பெண்களை கடத்தி சென்றது போகோஹரம் தீவிரவாதிகள் என சந்திக்கப்படுகின்றது. ஏற்கனவே இத்தீவிரவாதிகளால் 300 பள்ளிச்சிறுமிகள் மற்றும் இளம்பெண் ஒருவர் கடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

போகோஹரம் தீவிரவாத குழுக்களின் தாக்குதலை தடுத்து நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த அல்ஹா டர் என்ற நபர் கூறுகையில், கடந்த வியாழனன்று மதியம் துப்பாக்கியுடன் அங்கு வந்த நபர் ஒருவர், பெண்களை அவர்கள் வந்த வாகனத்தில் மிரட்டி ஏற்றிச்சென்றதாக கூறினார். அம்மாநிலத்தின் மிகவும் பின் தங்கிய பகுதியாகவும், தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியாகவும் விளங்கும் மறைவிடத்திற்கு அப்பெண்கள் அழைத்து சென்றபோது தெரிய வந்துள்ளது.

இந்த கடத்தலை தடுக்க முயன்ற இரண்டு வாலிபர்களையும் தீவிரவாதிகள் கைது செய்து அழைத்து சென்று விட்டதாக தர் கூறியுள்ளார். கடத்தில் குறித்து தங்களுக்கு தகவல் கிடைத்தவுடன் அங்கு சென்றதாகவும் அதற்கு முன்பே இந்த இடங்களை காலி செய்துவிட்டு தீவிரவாதிகள் சென்றுவிட்டதாக தர் மேலும் கூறினார்.

# கூடங்குளம் அணு உலை பாதுகாப்பை அதிகப்படுத்த இந்தியா வேண்டுகோள்



(மாஸ்கோ)
நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்யா உதவியுடன் ரூ.17,200 கோடியில் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் தலா 1,000 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளது. 3-வது மற்றும் 4-வது அணு உலைகள் அமைப்பதற்கான ஒப்பந்தமும் இந்தியா, ரஷ்யா இடையே கையெழுத்தாகி உள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மின் உற்பத்தியை தொடங்கிய முதல் அணு உலை, கடந்த வாரம் தனது முழு உற்பத்தி திறனை எட்டி 1,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்தது. பாதுகாப்பை கருத்தில் கொண்டு கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் 2 ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இந்த நிலையில் ஜப்பான் புகுஷிமா அணு உலையில் சுனாமியை தொடர்ந்து ஏற்பட்ட விபத்தினால், இப்போது இந்தியாவும் கூடங்குளம் அணு மின் நிலையத்தின் பாதுகாப்பை அதிகப் படுத்தும்படி கோரிக்கை விடுத்துள்ளதாக ரஷ்ய அணுசக்தி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ரஷ்ய அணுசக்தி நிறுவனமான ரோசாடாம் சார்பில் மாஸ்கோவில் அடோம்-2014 என்ற கண்காட்சி நடந்தது. இந்த விழாவில் கலந்து கொண்ட ரஷ்ய அணு மின் நிலைய நிறுவனத்தின் முதல் துணை ஜெனரல் அஸ்மோ லோவ் நிருபர்களிடம் கூறிய தாவது:-

கூடங்குளம் அணுமின் நிலை யத்தின் பாதுகாப்பை அதிகப் படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் வேண்டுகோள் எங்களுக்கு கிடைத்துள்ளது. இது போன்ற திட்டங்களில் அதிக கவனம் செலுத்து வதில் தவறில்லை. கூடங் குளம் அணு உலைகள் 4 அடுக்கு பாதுகாப்பு கொண் டது. திடீர் நெருக்கடி ஏற்படும்போது அந்த அணு உலை இயங்குவது உடனடியாக நின்றுவிடும். அணு உலைகளை குளிர்விக்கும் தண் ணீர் கிடைப்பதில் ஏதேனும் தடை ஏற்பட்டால் கூட, தொடர்ந்து 24 மணி நேரத்திற்கு தண்ணீர் கிடைப்பது இதில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.


ரோசாடாம் நிறுவன துணை தலைமை வடிவமைப்பாளர் மிக்ஹைல் பைகோவ் கூறும்போது, திடீர் நெருக்கடி ஏற்படும் போது கூட அணு உலையை விரைவாக குளிர்விக்க இந்த பாதுகாப்பு திட்டம் உதவும். உலகில் உள்ள மிகவும் பாதுகாப்பான அணு உலைகளில் இதுவும் ஒன்று.

இதில் வேகமான மற்றும் மந்தமான பாதுகாப்பு திட்டங்கள் என இரண்டும் உள்ளது. இவை இரண்டும் ஒன்றில் இருந்து மற்றொன்று வேறுபட்டு, தன்னிச்சையாக செயல்படக் கூடியது என்றார்.

ரோசாடாம் நிறுவனத்தின் துணை நிறுவன தலைவரும், கூடங்குளம் அணு உலை கட்டுமான பொறுப்பாளருமான லிமரெங்கோ கூறும்போது, முதல் அணு உலை தனது முழு உற்பத்தி திறனை கடந்த வாரம் எட்டியது. 2-வது அணு உலை இந்த ஆண்டு இறுதியில் முழு உற்பத்தியை எட்டும் என்று நம்புகிறோம் என்றார்.

2011-ம் ஆண்டு சுனாமி தாக்குதலின் போது ஜப்பானில் புகுஷிமா அணு மின் நிலையத்தின் அணு உலை சூடாகி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தை தொடர்ந்து தான் இந்தியா அணு உலை பாதுகாப்பை பலப்படுத்த கோரிக்கை விடுத்திருக்கிறது என்று அதிகாரிகள் கூறினர்.

# தென்கொரியா படகு விபத்து மீதான வழக்கு விசாரணை துவக்கம்



(சியோல்)
தென்கொரியாவில் கடந்த மாதம் 16ஆம் தேதி செவோல் என்ற படகு 476 பயணிகளுடன் பயணம் செய்து கொண்டிருந்த போது திடீரென்று கவிழ்ந்து தண்ணீரில் மூழ்கியது. இதில் பயணம் செய்து கொண்டிருந்தவர்களில் 325 பேர் உல்லாசப்பயணம் மேற்கொண்டிருந்த பள்ளி மாணவர்கள் ஆவர். மொத்த பயணிகளில் 292 பேர் மரணத்தைத் தழுவ இன்னமும் 12 பேரை மீட்புப்பணியினர் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

பாதுகாப்பை பற்றி யோசிக்காமல் பணத்திற்காக அதிக எண்ணிக்கையில் பயணிகளை எற்றிக்கொண்டதே இந்த விபத்திற்குக் காரணம் என்று தெரிய வந்தபோது மக்களின் கோபம் அதிகரித்தது. அது மட்டுமின்றி நீரில் சிக்கியவர்கள் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்க படகின் கேப்டனான லீ ஜோன் சியோக் தப்பிச் செல்ல முயற்சிப்பதாக வெளிவந்த காட்சி பயணிகளின் உயிர் பற்றிய பொறுப்புணர்வு இவருக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியது.

வேண்டுமென்றே அலட்சியப்படுத்தியதன் மூலம் கொலை நடைபெற வழிவகுத்ததாக சியோக்கும் அவரது மூன்று குழு உறுப்பினர்களும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். இந்த குற்றச்சாட்டானது முதல் நிலைக் கொலை அல்லது வன்மத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலை என்ற இரு பிரிவுகளுக்கு நடுவில் வரும். எனினும், இதற்கும் மரண தண்டனை தீர்ப்பு கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. அவர்கள் மீதான வழக்கு விசாரணை இன்று தொடங்குகின்றது.

இவர்கள் தவிர இந்தக் குழு ஊழியர்களில் மேலும் 11 பேர் குற்றவியல் அலட்சியம் மற்றும் கடல் சட்டத்தின் விதிமுறை மீறல்கள் போன்ற சிறிதளவான குற்றங்களுக்காக விசாரிக்கப்பட உள்ளனர். தங்களின் அலட்சியத்திற்காக இவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும் என்று மக்கள் ஒருபுறம் ஆத்திரப்படுகின்றனர்.

ஆனால் இதே காரணத்தினால் அவர்கள் மீதான விசாரணை நேர்மையாக நடைபெற முடியாது என்றும் ஒரு சாரார் கவலை தெரிவித்துள்ளனர். பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை விதிமீறல்களினால் இந்த விபத்து நடந்துள்ளது என்று வழக்கறிஞர்கள் வாதாட உள்ளதால் இந்த படகு நிறுவனத்தை நடத்திவரும் குடும்பத்தின் பின்னணியில் இருக்கும் யூ பியுங் உன் என்ற நிழல் தலைவனை அரசு தேடிவருகின்றது. இவனைப் பற்றிய துப்பு தெரிவிப்பவர்களுக்கும் வெகுமதி அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் முதன் முறையாக அதிக சம்பளம் பெற்ற பெண் தொழிலாளிகள் கௌரவிப்பு



(மலையகம்)
அண்மைக்காலமாக நமது தேயிலை தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. தோட்டங்களிலிருந்து உருவாகி வரும் ஆசிரியர்கள்,, அரச நிறுவனங்களில் தொழில் புரிவோர், வெளிநாடுகளில் பணிபுரிபவர்கள், நகரங்களில் பணிபுரிபவர்கள் என பெரும் மத்தியதர வர்க்கமொன்று தோன்றி வளர்ந்து வருகின்றது.

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லுதல், பெருநகரங்களில் வீட்டு வேலைக்கு செல்லுதல் போன்றவற்றை சில பெண்கள் விரும்புகின்ற மனோநிலையை பெற்றிருக்கிறார்கள். இது தவிர தேயிலை தொழிற்துறையில் நிர்வாகங்களால் வழங்கப்படும் நெருக்கடிகள், தொழிற்சாலை பராமரிப்புகள் அல்லது தொழிற்சாலையை மூடுகின்ற நிலைக்கு வழிநடத்துதல் தேயிலை மரங்களையும் பராமரிக்கின்ற விதங்கள் போன்ற பல காரணங்கள் ஒன்று கூடி இவ்வாறான எதிர்மறையான மனநிலைகளை தோற்றுவிக்கின்றன.

ஆனால் மலையகத்தில் இதற்கு எதிர்மாறாக பத்தனை மவுண்ட்வேர்ணன் தோட்ட தொழிலாளிகள் கொழுந்து பறிப்பதில் மிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மலையகத்தில் வரலாற்றில் முதன் முறையாக கொழுந்து பறித்து கூடுதலாக சம்பளம் பெற்ற பெண் தொழிலாளிகள் நேற்று தோட்ட உத்தியோகத்தர்களால் கௌரவிக்கப்பட்டார்கள். பத்தனை மவுண்ட்வேர்ணன் தோட்டத்தில் கொழுந்து பறித்து வந்த எம்.சாந்தகுமாரி என்ற பெண் தொழிலாளி ஒருவர் மொத்த சம்பளமாக ரூபா 57395 பெற்று சாதனைப்படைத்துள்ளார். ஒரு நாளைக்கு ஒரு தடவைக்கு 18 கிலோ கொழுந்து பறிக்குமிடத்தில் மேற்படி பெண் மேலதிக கொழுந்தாக ஒரு மாதத்திற்கு 1899 கிலோகொழுந்து பறித்துள்ளமை குறிப்பிடதக்கது.

கடந்த மாதம் தேயிலை கொழுந்து செழிப்பாக காணப்பட்டதால் குறித்த பெண் மட்டுமல்லாமல் ஏனைய தோட்ட தொழிலாளிகளும் மேலதிகமாக கொழுந்து பறித்து முப்பதாயிரத்திற்கும் கூடுதலாக சம்பளம் பெற்றுள்ளதாக தோட்ட அதிகாரி ஆர்.ஜீ.எம்.ரோஹன எட்வட் தெரிவித்தார். வெளிநாடுகளுக்கு சென்று வேலை செய்யும் பெண்கள் கூட இவ்வாறான சம்பளம் பெறுவதில்லை. வைத்தியர், தோட்ட உத்தியோகத்தர்கள், அரச நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் கூட இவ்வாறான சம்பளம் பெறுவதில்லை. இது மலையக தோட்ட தொழிலாளிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சம்பளமும் குறைவாகவே கிடைக்கின்றது. இச்சம்பவத்தினால் தற்போது தேயிலை கொழுந்து பறிக்கலாம் என யோசிக்க வைத்துள்ளது. தோட்ட தொழிலாளிகள் கொழுந்து பறிப்பதில் தங்களது விருப்பத்தோடு ஆர்வம் காட்டி வந்தால் நாடும், தோட்ட நிர்வாகமும் வளர்ச்சியடையும் எனவே இதை முறையாக செய்தால் ஏனைய தோட்டங்களும் வளர்ச்சியடையும் என தோட்ட உதவி அதிகாரி அர்ஜுன மெதகம தெரிவித்தார்.

இவ்வாறு கூடுதலாக சம்பளம் பெற்ற தொழிலாளிகளுக்கு தோட்ட நிர்வாகம் பரிசில்களும் வழங்கியமை பாராட்டக்கூடிய விடயமாகும். ஏனைய தோட்டங்களை விட எங்களுடைய தோட்டம் தொழிலாளிகளுக்கு பல சலுகைகளும் வழங்குகின்றது. தோட்ட அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள், என பலரும் எங்களோடு ஒற்றுமையாக இருப்பார்கள் அதுமட்டுமில்லாமல் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும், விருப்பத்துடனும் கொழுந்து பறித்தால் அதிக சம்பளம் பெறலாம் என தோட்ட தொழிலாளிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான தொழிலாளிகள் இருப்பதனால் தோட்ட நிர்வாகமும் அதிக வளர்ச்சியடைகின்றமை குறிப்பிடதக்கது. எனவே வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லுதல், பெருநகரங்களில் வீட்டு வேலைக்கு ·செல்லும் பெண்கள் சிரமங்களையும் எதிர்நோக்கி குறைவாக சம்பளம் எடுக்கும் பெண்கள் எமது பாரம்பரிய தொழிலான தேயிலை கொழுந்து பறிப்பதில் ஆர்வம் காட்டி வந்தால் தமது வாழக்கையில் வளர்ச்சி அடையாளம் என இச்சம்பவம் எடுத்துகாட்டுகின்றது.


# வரியை அதிகரித்த அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது ஐ தே க

(கொழும்பு)
உணவுப் பொருட்களுக்கான வரியை அரசாங்கம் 39 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக ஐக்கியதேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா இதனைத் தெரிவித்திடுந்தார்.

மேலும் பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்ட போது, அதன் லாபங்களை அரசாங்கமே பெற்றுக் கொண்டது. விலைகள் குறைக்கப்படும் போது, வரி அறவீடுகளை அரசாங்கம் அதிகரிக்கின்றது. இதன்மூலம் நுகர்வோருக்கு எந்தவித பயனும் கிடைக்க பெறுவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறையினை 6 மாதத்திற்குள் ரத்து செய்வேன்

## மாதுளுவேவ சோபித தேரர்



(கொழும்பு)
நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், 6 மாதத்திற்குள் நிறைவேற்று அதிகாரங்களை கொண்ட ஜனாதிபதி முறைமையினை ரத்து செய்வேன் என மாதுளுவேவ சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி என்ற கப்பல் நீக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். ஜனாதிபதி அதனை மறுத்தால், பொது வேட்பாளர் யாரென்று முடிவு செய்யப்படும். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை ரத்து செய்ய வேண்டுமென நிபுணர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளும் பரிந்துரை செய்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மோடிக்கு அளித்த வாக்குறுதியை காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும்

## ஐ.தே.க ஆலோசனை

(கொழும்பு)
இந்தியப் பிரதமரிடம் 13 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற விரும்புவதாக மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தினை காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் தொடர்பில் எவருக்கும் நம்பிக்கை இல்லை. தீர்வு எதனையும் எட்டாது வெறுமனே பேச்சு நடத்துவதில் எவ்வித பயனும் கிடையாது. அரசமைப்புக்கான 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எவ்வித தடைகளும் இல்லை. 13ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர அரசுக்கு விருப்பம் இல்லாவிட்டால், வேறு மாற்று அதிகாரப் பகிர்வு யோசனைத் திட்டமொன்றை அரசு முன்வைக்க வேண்டியது அவசியமானது. எனினும் இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தாது தம்மை விமர்சனம் செய்யும் தரப்பினரை துரோகிகளாக அடையாளப்படுத்துவதில் ஜனாதிபதியும் சில அமைச்சர்களும் கூடுதல் சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் பங்கேற்று நேரத்தை விரயப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது என்பது குறித்து அரசு எழுத்து மூலமான யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும்.

அவ்வாறு எழுத்து மூலமான யோசனைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எம்மால் பதிலளிக்க முடியும் என அவர் மேலும் அவர் தெரிவித்தார் .

# இனவாத தீக்கு எரியூட்டியிருப்பின், இன்று தமிழக முதல்வர் பொம்மைக்கு எரியூட்டத் தேவையில்லை

(கொழும்பு)
இலங்கையின் இனப் பிரச்சினையை ஆண்ட சிங்கள அரசுகள் இதயசுத்தியுடன் தீர்த்து இனவாத தீக்கு எரியூட்டியிருப்பின், இன்றைய தமிழக முதல்வர் பொம்மைக்கும் தீயூட்டுவதும் சர்வதேச விசாரணைக்கும் முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய தேவையும் ஏற்பட்டிராது என்று ஜனநாயக மக்கள் முன்ணணயின் ஊடக செயலாளர் பாஸ்கரா தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

புரையோடிப் போன இனவாத பிரச்சினையின் காரணமாகவே தமிழர் நசுக்கப்படுவது உலகறிந்ததே. இதனைத் தீர்க்காததால் தான் இன அழிப்பு ஏற்பட்டது. யுத்தம், யுத்த இழப்புகளும் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை அரசை விரட்டும் சர்வதேச விசாரணைகளுக்கும் வழிவகுத்தது. இனப்பிரச்சினை அன்றே தீர்க்கப்பட்டிருந்தால் இப்பிரச்சினை ஏற்பட்டிருக்காது. இதற்கு மேலாக தமிழகத்தின் எழுச்சியும் அதனைத் தொடர்ந்து ஜெயலலிதாவின் மத்தியரசுக்கான கோரிக்கைக்கும் இடம் வந்திருக்காது.

இன்றைய காலகட்டத்தில் எமது ஜனாதிபதி இந்தியப் பிரதமர் பதவியேற்புக்கு சென்று நல்லிணக்கத்தை காட்டிய அதேவேளையில், இனவாதத் தீயை அணைக்காமல் இனவாதத்திற்கு தீனி போடும் செயலும் அயல்நாட்டு இரு நாட்டு உறவுகளை பாதிக்கும் செயற்பாடுகளும் ஏற்புடையதல்ல. இன்றைய தேவை உடனடி அரசியல் தீர்வே. இதன் மூலமே நாட்டின் சுபீட்சமும் நாட்டின் ஐக்கியமும் பாதுகாக்கப்படும் எனத் தெரிவித்தார் பாஸ்கரா.

# பாகிஸ்தானில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு நடவடிக்கை

(பாகிஸ்தான்)
பாகிஸ்தானில் தொடர்ந்து தீவிரவாதிகளால் தாக்குதல் நடாத்தப்பட்டுவரும் நிலையில் அங்கு வசிக்கும் இலங்கையர்கள் தொடர்பில் முழு கவனம் செலுத்தி வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள கராச்சி விமான நிலையத்தில் 9 மற்றும் 10ம் திகதிகளில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் சுமார் 28 பேர் வரையில் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கராச்சி பகுதியிலுள்ள பல் கலைக்கழகங்களில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களுக்கு இதனால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது.

# லண்டன் மாநாட்டில், இலங்கை பாலியல் வன்முறைகள் குறித்த விவாதம் இடம்பெறாதது ஏன்?

(லண்டன்)
பிரித்தானியா, லண்டனில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமான மோதல்களில் பாலியல் வன்முறைகளைத் தடுப்பது குறித்த அனைத்துலக மாநாட்டில், இலங்கை குறித்த விவாதத்துக்கு இடமளிக்கப்படாதது ஏன் என பிரித்தானிய ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் மற்றும் ஐ.நாவின் சிறப்பு தூதுவர் ஏஞ்சலினா ஜொலி ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இந்த மாநாட்டில் 140 வரையான நாடுகள் பங்கேற்கின்ற போதும், இலங்கை இதனைப் புறக் கணித்துள்ளது.
நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநர்ட்டில், சிரியா, கொங்கோ உள்ளிட்ட நாடுகளில் பாலியல் வன்முறைகள் தொடர்பான விவாதிக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ள போதும், இலங்கையில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் குறித்த விவாதத்துக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. இலங்கையில் போரின் போது, பாலியல் வன்முறைகள் ஆயதமாக பயன்படுத்தப்பட்டுள்ள போதும், அதற்கான ஆதாரங்கள் பல கிடைத்துள்ள போதும், இந்த மாநாட்டில், இலங்கை விவகாரம் குறித்த விவாதம் ஏற்பாடு செய்யப்படவில்லை என்று பிரித்தானிய ஊடகங்கள் விசனம் வெளியிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் தன் பாவங்களை பாராளுமன்றத்தில் கழுவப் பார்க்கிறது - மனோ கணேசன்

(கொழும்பு)
பாராளுமன்றத்தை அதிகாரமில்லாத நிறுவனமாக மாற்றி, எதிர்க்கட்சிகளை எட்டி உதைத்த இந்த அரசாங்கம், இன்று தன் மனித உரிமை பாவங்களை பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்து கழுவி, இந்நடவடிக்கையில் எதிர்கட்சிகளையும் பங்காளிகள் ஆக்க முயல்கிறது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

தலைவர்கள் இதை செய்கிறார்கள் என்றால் அவர்களின் சீடர்கள், முதல்வர் ஜெயலிதாவின் கொடும்பாவியை எரித்து, பிரதமர் மோடியை திட்டி தீர்த்து கொழும்பு நகர வீதிகளில் இந்தியாவை ஆத்திரமூட்டுகிறார்கள் என அவர் தெரவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு இன்று கொழும்பில் இடம்பெற்றது. இம் மாநாட்டில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது, ஐநா மனித உரிமை ஆணையாளரின் இந்த விசாரணை முஸ்தீபுகள் திடீரென இன்று காலையில் முன்னறிவித்தல் இல்லாமல் ஆரம்பிக்கப்படவில்லை.

கடந்த ஐந்து வருடங்களாக ஐநா சபை இலங்கை அரசுடன் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. 2009 ல் போர் முடிந்த கையுடன் ஐநா செயலாளர் நாயகமும், இலங்கை ஜனாதிபதியும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதியின் விசேட மனித உரிமை பிரதிநிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க; இலங்கையின் ஐநா பிரதிநிதி பாலித கோஹன, அன்றைய சட்டமா அதிபரும், இன்றைய பிரதம நீதியரசருமான மொஹான் பீரிஸ், அன்றைய ஜெனீவா பிரதிநிதி தமரா குணநாயகம் ஆகியோர் தொடர்ச்சியாக ஐநா சபையில் இலங்கை அரசு சார்பாக அறிக்கை சமர்ப்பித்து உறுதிமொழிகள் வழங்கினர்.

அத்துடன் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட ஆணைக்குழு சிபாரிசுகளை நிறைவேற்றுவதாக இந்த அரசு, ஐநா சபைக்கு வாக்குறுதி அளித்தது. இந்த பல்வேறுபட்ட அடிப்படைகளில்தான் இன்றைய ஐநா மனித உரிமை ஆணையாளரின் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே தாம் ஏதோ ஒரு அப்பாவி அரசாங்கம் போலவும், விபரமில்லா சிறு குழந்தையை போலவும் இனிமேலும் இவர்கள் நாடகம் நடிக்க முடியாது.

இன்று இந்த நாட்டில் பாராளுமன்ற அதிகாரங்களை இந்த அரசு வெட்டி துவம்சம் செய்து ரொம்ப நாளாகிவிட்டது. இன்று அதிகாரம் முழுக்க அலரி மாளிகையில் குவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் அரசியலமைப்பை திருத்தும் முக்கியமான 18ம் திருத்த மசோதாவை, காலையில் சமர்பித்து, பகலில் பேசி, மாலையில் சட்டமாக்கி கொண்டு போனவர்கள், இவர்கள். அதற்கு விலைகொடுத்து வாங்கப்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களை பயன்படுத்தியவர்கள், இவர்கள். அன்றே இந்த பாராளுமன்றத்தின் மகிமை இவர்களால் தோற்கடிக்கப்பட்டது.

இன்று வெள்ளம் தலைக்கு மேலே போய் கொண்டிருக்கின்றது. கழுத்து பட்டி இறுகுகின்றது. இந்த பாரதூர நிலைமை இப்போது அரசுக்கு நன்கு தெரியும். ஆகவே தான், பாராளுமன்றத்துக்கு இந்த விடயத்தை தள்ளி பொறுப்பை எம்பீக்களிடம் விட்டுவிட்டு இந்த அரசாங்க தலைமை தப்ப பார்க்கிறது.

இதனால்தான் இன்று இவர்களுக்கு பாராளுமன்றம் மீது திடீர் பாசமும், மரியாதையும் ஏற்பட்டுள்ளது. முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவியை எரிக்க இவர்களுக்கு என்ன யோக்கியத்தை இருக்கிறது? இங்கே இவர்கள் செய்யும், பேசும் இனவாத, மதவாத கருத்துகளுக்கு பதிலடியாகத்தான் தமிழக அரசியல்வாதிகள் செயற்படுகிறார்கள்.

இதில் ரகசியம் கிடையாது. இங்கே தமிழருக்கும், முஸ்லிம்களுக்கும் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை கூட கொடுக்க வேண்டாம் என கூச்சல் எழுப்பும் இனவாதிகள், ஜெயலலிதாவை பார்த்து தமிழ் இனவாதி என்றும், மோடியை பார்த்து சர்வதிகாரி என்றும் கூக்குரல் எழுப்புவது வேடிக்கை.

இதில் தேசிய தேசப்பற்று இயக்க தலைவர் பல்வைத்தியர் குணதாச அமரசேகர கோமாளித்தனமாக பேசுகிறார். ஜெயலலிதா, இலங்கையில் தனித்தமிழ் ஈழத்தை உருவாக்கி, பின்னர் இந்தியாவில் தமிழ்நாட்டை தனித்தமிழ் நாடாக்கி, ஒரு அகண்ட தமிழ் ராஜ்யத்தை உருவாக்க முயல்கிறார் என இவர் சொல்கிறார்.

ஆகவே பிரதமர் மோடி கவனமாக இருக்க வேண்டும் என இந்தியாவின் ஐக்கியத்தில் மிகவும் அக்கறை உள்ளவர் போல கருத்தும் கூறுகிறார். இவரேதான் சில மாதங்களுக்கு முன்னர் இந்தியா துண்டு துண்டாக உடைந்து போக வேண்டும் என்று பகிரங்கமாக சாபம் இட்டவர். ஆகவே இந்த பல் வைத்தியர், பைத்தியத்துக்கு வைத்தியம் செய்யும் ஒரு வைத்தியரைச சந்திக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# ஓட்டமாவடியில் உரிய முறையில் பராமரிக்கப்படாத வடிகான்கள்



(மட்டக்களப்பு)
ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவிற்குள் அமைக்கப்பட்ட வடிகான்கள் உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை என ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர். ஏ.எல்ஜுனைட் நளீமி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நுழைவாயிலாக அமைந்துள்ள, இப்பிரதேசத்தினூடகவே போக்குவரத்துக்கள் அதிகம் மேற்கொள்ளப்படுவதுடன், உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் பாசிக்குடா கடற்கரைக்குச் செல்லும் போதும் ஓட்டமாவடியூடாகவே பயணிக்கின்றனர்.

இப் பிரதேசத்தினை ஊடறுக்கும் பிரதான வீதியின் இருமருங்கிலும் காணப்படும் வடிகான்கள் சேதமடைந்து நீர் தேங்கி நிற்பதால், பிரதேசத்தில் டெங்கு உட்பட பல்வேறு சுகாதார பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பாக அமைந்துள்ளதுடன், சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பாக அமைந்துள்ளது.
அத்துடன் மூடிகள் இடப்படாமையினால் பல விபத்துக்களும் ஏற்படுகின்றன. கடந்த காலங்களில் மாவட்ட அபிவிருத்திக்கு பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொளளப்பட்ட போதிலும், முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய இவ்வடிகான் புனரமைப்பு வேலைகள் புறந்தள்ளப்பட்டு வருவது கவலையளிக்கின்றது.

இப்பிரச்சினை தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக விஜயம் செய்து பிரதான பொறியியலாளரிடம் முறைப்பாடு செய்த போது ஒரு மாத அவகாசம் கோரியிருந்தார். ஆனால் ஜூன் மாதம் ஆரம்பமான நிலையிலும் எவ்வித பதில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இரண்டு வாரங்களுக்குள் இதற்கான உரிய தீர்வுகள் கிடைக்காதவிடத்து பிரதேச மக்களுடன் சேர்ந்து சாலை மறியல், கவனஈர்ப்பு போராட்டத்தில் இறங்க வேண்டி ஏற்படும் என்பதனை கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒரே நேரத்தில் கழன்ற சக்கரங்கள் - தெய்வாதீனமாக தப்பிய பயணிகள்



(கொழும்பு)
கொழும்பில் இருந்து நேற்று வவுனியா நோக்கிப் பயணித்த அரைச் சொகுசு பஸ் ஒன்றின் பின்சக்கரங்கள் நான்கும் ஒரே நேரத்தில் கழன்று விழுந்ததால் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று காலை 9.30 அளவில் புத்தளம் - அனுராதபுரம் வீதியின் 20ம் கட்டைப் பகுதியில் ஏற்பட்ட இந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். விபத்தின்போது அதிகமான பயணிகள் குறித்த பஸ்ஸில் பயணித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## பழைய இடத்திலேயே குப்பைகளை கொட்ட தற்காலிக அனுமதி

(ஹற்றன்)
குடாகம எனும் இடத்திலேயே தற்காலிகமாக குப்பைகளை கொட்டுவதற்கு ஹட்டன் மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக ஹட்டன் - டிக்கோயா நகரசபைத் தலைவர் அழகமுத்து நந்தக்குமார் தெரிவித்தார்.



புதன்கிழமை இந்த குப்பை கொட்டுவது தொடர்பான வழக்கு ஹட்டன் நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற போதே, இந்த முடிவு தமக்கு கிடைக்கப் பெற்றதாகவும் ஒரு மாத காலத்திற்குள் தகுந்த இடம் ஒன்றை தெரிவு செய்து கொள்ளும் படியும் நீதவான் அறிவுறுத்தியதாகவும் நகரசபைத்த தலைவர் தெரிவித்தார்.

இக்குப்பை விடயம் தொடர்பாக (10.06.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஹட்டன் மல்லிகைபூ சந்தியில் வீதியை மறித்து மல்லிகைபூ தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர். இதனால் ஹட்டன்-கொழும்பு மற்றும் கண்டி பகுதிகளுக்கான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.

நகர சபையால் ஹட்டன் நகர பகுதியில் சேகரிக்கப்பட்ட குப்பைகள் தமது மல்லிகைபூ தோட்ட தேயிலை பகுதியில் செவ்வாய்க்கிழமை கொட்டப்பட்டுள்ளதாகவும், இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் எனவே அவற்றை உடனடியாக அகற்ற நகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200ற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதுடன் பெண் தொழிலாளர்கள் வீதியை மறித்து வீதியில் அமர்ந்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இவ்விடயம் சம்பந்தமாக ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் தலைவர் அழகமுத்து நந்தகுமார் கருத்து தெரிவித்த போது, இந்த மாதம் 9ம் திகதி முதல் கடந்த 22 வருடங்களாக குப்பை கொட்டிய குடாகம பகுதியில் குப்பைகளை கொட்டக் கூடாது என ஹட்டன் நீதவான் நீதிமன்றால் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பாக இம்மாதம் 11ம் திகதி நீதிமன்றில் தமக்கான உத்தரவு கிடைக்க இருப்பதால் செவ்வாய்க்கிழமை சேகரிக்கப்பட்ட குப்பைகளை தற்காலிகமாக குப்பை சேகரிக்கும் இடங்களில் கொட்டி பொலித்தினால் தாம் மூடியுள்ளதாகவும், ஹட்டன் வில்புரட் புரையில் தாம் குப்பை மீது போட்டு மூடிய பொலித்தினை விசமிகள் அகற்றிய பின்னர் அவர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை செய்வதாகவும் தெரிவித்தார்.

மத்திய மாகண சபை உறுப்பினர்கள் மற்றும் அம்பகமுவை பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்ட இடத்திற்கு வந்து பேசியதன் பின்னர் பொலிசில் முறைப்பாட்டை பதிவு செய்து வழக்கு தொடர சம்மதித்து அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர். பிற்பகல் ஆறு மணியளவில் ஆர்ப்பாட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன் வாகன போக்குவரத்தும் வழமைக்கு திரும்பியது.

இந்த • ஆர்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் ஹட்டன்-டிக்கோய நகர சபைத் தலைவர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு எதிராக ஹட்டன் பொலிசில் செவ்வாய்க்கிழமை செய்த முறைப்பாட்டுக்கு ஏற்ப புதன்கிழமை பொலிசார் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கை தள்ளுப்படி செய்த நீதவான் இவர்கள் இருவருக்கு எதிராக மட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது ஹட்டன்-டிக்கோய நகர சபை ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் எதிராகவே வழக்கு தாக்கள் செய்யப்பட வேண்டும் என்று பொலிசாருக்கு அறிவுறுத்தியதாகவும் ஹட்டன்-டிக்கோயா நகர சபைத் தலைவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.....

பாராளுமன்றில் இந்தப் பிரேரனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தவிர யாரும் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்க மாட்டார்கள்.

எதிர்வரும் குறுகிய காலத் தில் பாராளுமன்ற தேர்தலோ அல்லது ஜனாதிபதி தேர்தலோ வரவுள்ள நிலையில், பிரேனையை எதிர்த்து வாக்களிக்க பாராளுமன்றில் அங்கம் வகிக் கும் பெரும்பான்மைக் கட்சிகள் துணியப் போவ தில்லை.

அத்துடன் ஆளும்தரப்புடன் உள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மலையக மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஐநா விசாரணைக் குழுவுக்கு எதிராகவே ஆளும் தரப்புடன் இணைந்து வாக்களிப்பர்.

இந்தநிலையில் நாட்டின் சட்டவாக்கத் துறையான பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகள் உள்ளிட்ட பெரும்பான்மைக் கட்சிகள்யாவும் இணைந்து சர்வதேச விசாரணையை தோற்கடித்த வரலாற்றுச் சாதனையை ஆளும் தரப்பு ஏற்படுத்த உள்ளதாக கூறப்படுகிறது.

இதன் மூலம் முழு இலங்கையுமே ஐநாவின் விசாரணையை எதிர்ப்பதாக பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில்

ஐ.நா விசாரணைக் குழுவினால் இலங்கைக்குள் பிரவேசித்து விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலையை சர்வதேச அளவில் தெரியப்படுத்த ஆட்சியாளர் முனைவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் மக்களுக்கு...

ஏறத்தாழ பத்தாயிரம் ஏக்கர் காணிகளுக்கு மேல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளவற்றில் ஒரு பகுதியே குறித்த 6,348 ஏக்கர் காணியாகும். வவுனியா மாவட்டத்திலேயே செட்டிக்குளம் பிரதேசத்தில் தான் இவ வாறு பெருந்தொகை காணிகள் அபகரிக்கப்பட்ட மோசமான செயல்பாடு இடம்பெற்றுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இந்த காணிகளுக்குள் தமிழ் பேசும் மக்களுக்கு உரித்துடைய காணிகளும் உள்ளதால், அரசின் இத்தகைய பாரிய நில அபகரிப்புக்கு எதிராக அமைச்சர் றிசாட் பதியுதினும் நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் வவுனியா மாவட்டத்தில் நிலத்தடி நீரில் கல்சியம் செறிவாக உள்ள இடங்களில் செட்டிக்குளம் பிரதேசம் முதன்மையாக உள்ளபடியால், நீண்ட காலமாக இப்பிரதேச மக்கள் சிறுநீரகம் தொடர்பான நோய்களால் கடும் அவஸ்தைப்பட்டு வருகின்றனர்.

இப்பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு மெனிக்பாம் முகாமுக்கு அருகாக மல்பத்து ஓயாவும், அருவி ஆறும் கலந்து பாயும் ஆற்று நீரை சுத்திகரித்து சுத்தமான குடிநீரை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக்காண வேண்டிய முக்கிய காலகட்டத்தில் நாமுள்ளோம். பிரதேச மட்டத்திலும், மாவட்ட ரீதியிலும் எம் மக்களுக்கு பல்வேறு தேவைகள் உண்டு.

இத்தேவைகளை குறைந்தபட்சம் வடமாகாண சபையினூடாகவாவது பூர்த்தி செய்யலாம் என்று நாம் நம்பியிருந்த போதும், காரியங்களை ஆற்ற விடாமல் ஆளுநர் மற்றும் பிரதம செயலாளருக்கு ஊடாக முட்டுக்கட்டைகள் இடப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது, மீனவர் விவகார்ரம் தொடர்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பல கடிதங்கள் மனமோகன் சிங்குக்கு எழுதியும், காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஆனால் புதிய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய முதல் கடிதத்தில் சிறீலங்கா அரசால் சிறை வைக்கப்பட்டுள்ள 82 தமிழக மீனவர்களையும் கட்டாயம் விடுவிக்க வேண்டிய நெருக்கடி மகிந்த அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும், ஜெனிவாவில் கிடைத்த வெற்றியும் எமது இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வை பெற்றுத்தருவதற்கான வாய்ப்புகள் அமைந்து வரும் நிலையில், இப்பிரதேசத்தில் சிலைகளை நிறுவுவது தொடர்பில் அண்மையில் சிறு பிரச்சினைகள், சச்சரவுகள் ஏற்பட்டுள்ளமை கவலை தரும் விடயமாகும்.

வெண்ணை திரண்டு வரும் வேளையில் தாளியை போட்டு உடைத்த கதையாக சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏறபடாமல் பார்த்துக் கொள்வது எல்லோருடைய பொறுப்பும் கடமையுமாகும்.

இன்று நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொள்பவர்கள் பக்கச்சார்பற்ற சேவையை மக்களுக்கு அர்ப்பணிப்போடு வழங்கி,

நீங்களும் உங்கள் குடும்பமும் பொருளாதார ரீதியாக மேமெழுந்து வர வேண்டும் என்று வாழ்த்துவதாகவும்,

செட்டிக்குளம் பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தாத ஆளணியி னருக்கான நிரந்தர நியமனம் வழங்கும் வைபத்தில் கலந்து கொண்டு

உரையாற்றும் போதே, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## ஐ.நா பிரதிநிதியின்...

வடக்கு உள்ளிட்ட சகல பிரதேசங்களுக்கும் சர்வதேச பிரதிநிதிகள் விஜயம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பியானியின் இலங்கை விஜயம் பற்றிய தகவல்களை ஏற்றுக் கொள்ள முடியாது என குறிப்பிட்டுளளது

## கச்சதீவு ஒப்பந்தத்தை..

இலங்கை தமிழர் விவகாரத்தில் நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் கண்மூடித்தனமாக இருகக்க் கூடாது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும் என்று ராஜா கேட்டுக் கொண்டார்.

## தமிழ்ப் பெண்கள்...

லண்டனில் நடைபெறும் வன்முறைகளின்போது பாலியல் வன்முறைகளை கட்டுப்படுத்தும் மாநாட்டுக்கு இணையாக கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வில் சிபினாலே இதனை குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு இராணுவ மயப் படுத்தப்பட்டிருப்பதனால் பெண்கள் பாதுகாப்பற்ற நிலைமையை உணர்வதாகத் தெரிவித்துள்ளாகுறிப்பாக யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இவ்வாறான ஓர் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நிகழ்வில் உரையாற்றிய பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீன், எந்த ஒரு நாடும் பாலியல் வன்முறைகளை புறக்கணித்து மனித உரிமைகளை பாதுகாப்பதாக கூறமுடியாது என்று குறிப்பிட்டார்.

### ஊடகவியலாளர்களுக்கான....

மேற்கொண்ட நடவடிக்கைகளை டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் சிறிலங்கா நிறுவனம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கும்படியும் அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் முறையான நிர்வாகம் தொடர்பான புலனாய்வு அறிக்கையிடலுக்காக ஊடகவியலாளர் களுக்கு பயிற்சியளிப்பதை டிரான்ஸ் பெரன்சி இன்டர்நெசனல் சிறிலங்கா நிறுவனம் நீண்டகாலமாக மேற்கொண்டு வந்துள்ளது.

இதன் மற்றுமொரு நடவடிக்கையாக அரசாங்கத்தினால் முன்வைகக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணங்க ஆணைக் குழுவின் அறிக்கையில் முறையான நிர்வாகம் தொடர்பான சிபாரிசுகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பான ஊடகவியல் அறிக்கையிடலுக்கான ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிக்கும் செயலமர்வு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் இது தொடர்பான சிங்கள மொழிமூல செயலமர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழிமூல செயலமர்வு பொலனறுவை கிரிதலே டியர் பார்க் ஹோட்டலில் மே மாதம் 22 ஆரம்பிக்கப்பட்டதுடன், பயிற்சி இடை நடுவே ஹொட்டல் முகாமைத்துவம் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின்பேரில் செயலமர்வை தொடர்ந்து நடத்த இடமளிக்க முடியாதென அறிவித்தது. இதை உறுதிப்படுத்த எழுத்துமூல சாட்சியங்கள் எம்மிடம் உண்டு.

கிரித்தலையில் செயலமர்வை நடத்தமுடியாமல் போனதன் பின்னர் அதை நீர்கொழும்பு கோல்ட் சேண்ட்ஸ ஹோட்டலில் நடத்துவதற்க கடந்த வார இறுதியில் (யூன் 06 முதல் 08 வரை) நடத்த நடவடிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் திட்டமிட்டு அங்குவந்த குழுவினர் அதற்கு இடையூறு ஏற்படுத்தினர்.

புலிகளுக்கு ஆதரவளிப்பதாகவும், இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைகளில் சாட்சியமளிக்க பயிற்சியளிப்பதாகவும் தெரிவித்து பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்திய இக் குழுவினர் வேறு பிரதேசங்களிலிருந்து நீர்கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதற்கான சாட்சியங்களும் இருக்கின்றன.

இச்செயலமர்வு நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்காகவோ அல்லது வேறு தீய நோக்கங்களைக் கொண்ட செயலமர்வோ அல்ல. இது ஒரு சட்டரீதியான செயலமர்வு என அங்கிருந்த எமது பிரதிநிதிகள் தொடர்ந்து சுட்டிக்காட்டிய போதும், ஆர்ப்பாட்டக்காரரர்களை கலைப்பதற்கு பொலிஸார் எதுவித நடவடிக்கை களையும் எடுக்காததுடன், மாறாக செயலமர்வை இடை நிறுத்தும்படி வலியுறுத்தினர். அந்த இடத்துக்கு வந்த பொலிஸ் அதிகாரி ஜே.கே. எச்.லியனகே எம்மால் இரு நடவடிக்கைகளை எடுக்க முடியுமென தெரிவித்தார்.

அதாவது, செயலமர்வை இடை நிறுத்திவிட்டு வெளியேறினால் நீர் கொழும்பைவிட்டு வெளியேறும் வரை பாதுகாப்பு வழங்க முடியும் என்றும், அவ்வாறில்லாமல் செயலமர்வை தொடர்ந்து நடத்தினால் அதற்குப் பாதுகாப்பு வழங்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் விடுத்த அறிவிப்பு தொடர்பாக டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் சிறிலங்கா நிறுவனம் தனது அதிருப்தியைத் தெரிவிக்கின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தேவையான முறையில் பொலிஸார் நடந்துகொண்டதன் மூலம் இதற்குப் பின்னணியில் மறைமுக சக்தியொன்று செயற்பட்டிருப்பது தெளிவாகின்றது.

இந்த செயலமர்வுக்கு வருகைதந்த ஊடகவியலாளர்கள் அரச தகவல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் என்பதுடன் கூலி ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இவர்கள் புலி ஆதரவாளர்கள் என்றால் இவர்களுக்கு ஊடகவியலாளர் என அடையாள அட்டை வழங்கியதற்கான பொறுப்பை அரச தகவல் திணைக்களம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இருந்தும் இந்த ஊடகவியலாளர்கள் மீது இவ்வாறு துரதிஷ்ட வசமாக புலி முத்திரை குத்தியது அவர்கள் தமிழ் மொழியில் ஊடக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இருக்கலாம்.

இது இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த பெரும் பாதிப்பை உருவாக்கும்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக ஊடகப் பயிற்சியில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கருதி கொழும்பு கலதாரி ஹொட்டலுக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த ஹோட்டலில் அறைகளை ஒதுக்கி ஒரு மணித்தியாலத்திற்குள் ஹோட்டல் நிர்வாகம் ஊடகவியலாளர்களை உடனடியாக வெளியேறும்படி அறவித்தது.

இதற்கான காரணத்தைக் கேட்டபோது, பிரபல அமைப்பெனக் கூறிக்கொள்ளும் குழு ஒன்று ஊடகவியலாளர்களை ஹொடலைவிட்டு வெளியேற்றாவிட்டால் ஹொட்டலை சுற்றி வளைக்கப்போவதாக அச்சுறுத்தியதாக ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்தது.

சிவில் நிர்வாகத்தில் தலையிடுமளவிற்கு பல்வேறு அமைப்புகளுக்குள்ள அதிகாரம் குறித்து டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் சிறீலங்கா நிறுவனம் ஆச்சரிய மடைகின்றது.

புலனாய்வுப் பயிற்சிக்காக வருகை தந்திருந்த ஊடகவியலாளர்கள் அன்று முழுவதும் கொழும்பு நகரில் ஆங்காங்கே தரித்து நின்றுவிட்டு மறுநாள் காலை தமது ஊர்களுக்குத் திரும்பினர்.

இந்த ஊடகவியலாளர்கள் தமிழர்கள் என்பதாலா இவ்வாறு அநீதியிழைக்கப்பட்டது என நாங்கள் மீண்டும் கேள்வி எழுப்பு கின்றோம்.

இந்தப் பயிற்சிக்காக பத்திரிகைகள் மூலம் பகிரங்கப்படுத்தி விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் செயலமர்வு பகிரங்கத் தன்மையுடனும் பொறுப்புடனும் நடத்தப்பட்டது.

தேசிய ஒற்றுமைக்காக தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய இந்த யுகத்தில் இவ்வாறு ஊடகத் துறையில் மேலதிக பயிற்சியைப் பெறவிருந்த சந்தர்ப்பத்தை தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இல்லாமற் செய்தது வருத்தப் படக்கூடியதும், மனித உரிமைகளை மீறுவதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமாகின்றது




20-வது உலக கோப்பை கால்பந்து போட்டி பிரேசிலில் இரவு 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கு பிரேசில் முழு அளவில் தயாராகி விட்டது. அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுக்க வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் பங்கேற்கும் 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. தொடக்க ஆட்டத்தில் போட்டியை நடத்தும் பிரேசிலும், குரோஷியாவும் (ஏ பிரிவு) சாவ பாலோ நகரில் மோதுகின்றன இந்தப் போட்டியின் மொத்த பரிசு தொகை ரூ.3450 கோடி என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

முதல் போட்டி தொடங்கவுள்ள நிலையில், முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டு செயற்கை கால் பொருத்தியுள்ள பிரேசில் நாட்டை சேர்ந்த ஒருவர் வரலாற்று சிறப்பு மிக்க இந்த கால்பந்து போட்டியை தொடங்கி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"மீண்டும் நடக்க தொடங்குங்கள்" (வாக் அகைய்ன்) என்ற திட்டத்துக்காக உலகின் தலைசிறந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் "எக்ஸோ ஸ்கெலிட்டன்" என்ற செயற்கை கால்களை உருவாக்கியுள்ளனர். மூளையின் கட்டளைக்கேற்ப செயல்படும் வகையில் மிக நுட்பமான மெல்லிய செயற்கை தோலையும் இணைத்து இந்த மாற்றுக் கால்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வகை செயற்கை கால்களை பொருத்திய ரோபோக்களின் மூலம் முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மூளையில் தோன்றும் உணர்வுகளின்படி இந்த அதிநவீன செயற்கை கால்கள் செயல்படுகின்றன.

இவ்வகையிலான செயற்கை கால்களை பொருத்திய பிரேசில் நாட்டை சேர்ந்த சிலருக்கு வழங்கப்பட்ட நீண்ட கால பயிற்சியின் பலனாக, மூளையின் கட்டளைக்கேற்ப செயற்கை கால்கள் துல்லியமாக செயலாற்றுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. உலக கோப்பை கால்பந்து போட்டியை இவர்களில் ஒருவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

இதைப்போன்ற வரலாற்று சிறப்பு மிக்க ஒரு போட்டியை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் முதல் பந்தை உதைத்து தொடங்கி வைப்பதன் மூலம், அறிவியலின் ஆற்றலை விளங்க வைப்பதுடன் மட்டுமின்றி,முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட பலருக்கு தன்னம்பிக்கையை விதைக்கவும் முடியும் என்று பிரேசில் அரசு நம்புகிறது..

SRI LANKA RED CROSS SOCIETY

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**மன்னார் கிளை**

**வேலைவாய்ப்பு**

**அலுவலக எழுதுவினைஞர் (General Clerk)**

**மேற்படி உத்தியோகத்தருக்குரிய அடிப்படை தகைமைகள்**


1. க. பொ.த (உ/த)
2. கணனியில் எழுத்து வேலைகள் செய்யக்கூடிய திறமை இருத்தல் வேண்டும்
3. ஆங்கில மொழியறிவு இருத்தல் வேண்டும் (எழுதுதல், வாசித்தல்).
4. மன்னார் நகரப் பகுதியில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
5. எழுதுவினைஞராக பணியாற்றிய அனுபவம் இருப்பின் வரவேற்க தக்கது.

மேற்படி அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் 20.06.2014 இற்கு முன்புதாக கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

கிளை நிறைவேற்று அதிகாரி ,இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - மன்னார் கிளை
இல 06 , தலைமன்னார் வீதி , சாவங்கட்டு , மன்னார்.

மின்னஞ்சல் : mannarbeo@redcross.lk

# சென்னையில் சர்வதேச பீடே ரேட்டிங் செஸ்



செயிண்ட் ஜோசப்ஸ் 4-வது சர்வதேச பீடே ரேட்டிங் செஸ் போட்டி சென்னையில் நடத்தப்படுகிறது. இந்த் போட்டி வருகிற 19 முதல் 23 வரை சோழிங்க நல்லூரில் உள்ள செயிண்ட் ஜோசப்ஸ் என்ஜினியரிங் கல்லூரியில் நடக்கிறது. இந்தப் போட்டியின் மொத்த பரிசு தொகை ரூ.1.80 லடசம் ஆகும். சாம்பியன் பட்டம் பெறுபவருக்கு ரூ.40 ஆயிரம் வழங்கப்படும்.

9 சுற்றுகளை கொண்ட இந்த போட்டி சுவிஸ் முறையில் நடைபெறும். இதில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள் வருகிற 14ஆம் திகதி விண்ணப் பிக்க வேண்டும். மேற்கண்ட தகவலை போட்டி அமைப்புக்குழு தலைவர் பி.பாபு மனோகரன், செயலாளர் வி.ரவிச்சந்திரன் ஆகியோர்தெரிவித்து உள்ளனர்.

# டென்னிஸ் தரவரிசை: இரட்டையர் பிரிவில் சானியா மிர்சாவுக்கு 6-வது இடம்




பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் முடிவை தொடர்ந்து உலக டென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் முதலிடத்தில் நீடிக்கிறார். இறுதிப போட்டியில் தோல்வி கண்ட செர்பியா வீரர் நோவாக் ஜோகோவிச் 2-வது இடத்திலும், சுவிட்சர்லாந்து வீரர் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்கா 3-வது இடத்திலும், சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் 4-வது இடத்திலும் தொடருகின்றனர். இங்கிலாந்து வீரர் ஆண்டிமுர்ரே 3 இடங்கள் முன்னேறி 5-வது இடத்தை பிடித்துள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு தர வரிசையில், பிரெஞ்ச் ஓபன் போட்டியில் 2-வது சுற்று ஆட்டத்தில் அதிர்ச்சி தோல்வி அடைந்த அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் முதலிடத்தில் தொடருகிறார். சீன வீராங்கனை லீ நா 2-வது இடத்தில் நீடிக்கிறார். இறுதிப்போட்டியில் ஷரபோவாவிடம் தோல்வி கண்டு சாம்பியன் பட்ட வாய்ப்பை இழந்த ருமேனியா வீராங்கனை சிமோனே ஹலேப் 4-வது இடத்தில் இருந்து 3-வது இடத்துக்கு முன்னேறினார். போலந்து வீராங்கனை அக்னிஸ்கா ராட்வன்ஸ்கா 3-வது இடத்தில் இருந்து 4-வது இடத்துக்கு சரிந்தார். சாம்பியன் பட்டம் வென்ற ரஷிய வீராங்கனை மரிய ஷரபோவா 8-வது இடத்தில் இருந்து 5-வது இடத்துக்கு முன்னேறினார்.

இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற சூய்பெங் (சீனா), *R-nt-ah* (சீனா)ஆகியோர் முறையே பெண்கள் இரட்டையர் பிரிவில் முதலிடம் வகிக்கின்றனர். பிரெஞ்ச் ஓபன் இரட்டையரில் கால் இறுதியில் தோல்வி கண்ட இந்திய வீராங்கனை சானியா மிர்சா 8-வது இடத்தில் இருந்து 6-வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார். இது அவரது சிறந்த தர வரிசையாகும். சானியாவின் ஜோடியான காரா பிளாக் (ஜிம்பாப்வே) 8-வது இடத்துக்கு முன்னேறினார்.

# ஐ.சி.சி.யை
## மிரட்டிய இந்திய கிரிக்கெட் வாரியம்



சர்வதேச கிரிக்கெட் கவுனசிலில் (ஐ.சி.சி.) முடிவு எடுபபதில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியங்களுக்கு அதிக அதிகாரம் மற்றும் கூடுதல் வருவாய் பகிர்வு ஆகியவற்றுக்கு வழி வகை செய்யும் திருத்தப்பட்ட புதிய சட்ட வரைவு சில மாதங்களுக்கு முன்பு ஐ.சி.சி. கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டது.இதற்காக மேற்கொண்ட முயற்சிகள் குறித்து இந்திய கிரிக்கெட் வாரிய செயலாளர் சஞ்சய் பட்டேல் ஐதராபாத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் விளக்கினார்.

அப்போது அவர் கூறுகையில்,எங்களது திட்டத்திற்கு பல்வேறு ஊடகங்கள் எதிர்ப்பு தெரிவித்தன. பெரும்பாலான கிரிக்கெட் வாரியங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தன. இந்திய கிரிக் கெட் வாரியத்திற்கு முக் கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றால்,எங்க ளுக்கு என்று சொந்தமாக இன்னொரு ஐ.சி.சி. அமைப்பை உருவாக்க வேண்டி இருக்கும் என்று எச்சரி த்தோம். அதன் பிறகே இங்கிலாந்து,ஆஸ்திரேலிய கிரி க்கெட் வாரியங்கள் எங்கள் திட்டத்தை ஏற்றுக் கொண் டது என்றார்.

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தில் 12.06.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org